1929௵ ஜனவரிமீ 1௨ [பகு

# ...மோகினி.

ஆசிரியர்
ஆரணி குப்புசாமி முதலியார்



பிரசுரகர்த்தா
...ணிசாமி முதலியார்,
...னந்த நிலயம், சென்னை.

JL
7211,M22 M4
M29.7.12
186532

# மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை

இதில் இனிய நாவல்களே வெளிவரும் ... ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அ... ளுக்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நம... "ஆ... போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922வரு பிப்ரவரிமீ 1௳ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச் சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" என்ற நாவல்கள் வெளியாகி இப்பொழுது "இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" என்ற நாவல் தொடங்கி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ள வேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங் கொண்டது. அடியிற் கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0

வெளி நாட்டிற்கு ,, 3—0—0

**இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.**

அமராவதி 2 பாகமும் ரூ. 4 0 பவளத்தீவு 2 பாகமும் ரூ. 3 0

ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் ரூ. 9 10 0

அர்ஜுனஸிங், சுந்தர் ,, 0 2 0

அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள் 1 12 0

கற்பகச்சோலையின் அற்புதக்கொலை ரூ. 1 4 0

கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும் ,, 3 4 0

இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம் ,, 2 0 0

---

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

கருணா[illegible] பிள்ளையின் காணமற்போன ஆளாகிய வேலாயுதத்[illegible]ற்றிப் போலீசார் மூலமாக எங்கும் தேடும் படியான ஏற்பாடு செய்யப்பட்டது; ஆனால் அதனால் ஏதே னும் காரியசித்தி யுண்டாகுமென்று கருணாகரம் பிள்ளை முதலியவர்கள் கருதக்கூடவில்லை. ஏனெனில் அச்சமயம் கருணாகரம்பிள்ளையின் விரோதிகள் போலீஸாரைத் தங்கள் வசப்படுத்திக்கொண் டிருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் கருணாகரம்பிள்ளைக்கு இடையூறு செய்கிற ஆளைப் பிடிக்க முயல்வார்கள் என்று கருதக்கூடவில்லை. அன்றிரவு அதற்கு மேல் இன்னும் அந்த விவகாரத்தைப்பற்றிக் கவனிக்க அவ காசமில்லை.

கிருஷ்ணராவ் ஜெகநாதனையும் கருணாகரம்பிள்ளையை யும் நோக்கி, "நாம் பெரிய வீதிப்பக்கமாய்ப் போய் வந்தா லென்ன?" என்றான். அவர்கள், "ஆகா அப்படியே செய்ய லாம்" என்றார்கள். உடனே மூவரும் புறப்பட்டுச் சென்றார் கள். பெரிய வீதி ஜனநெருக்கமானது. பிரதான கடைகள் நாடகசாலைகள் முதற்றரமான ஹோட்டல்கள் இவைகளெல் லாம் அங்குத்தானிருக்கின்றன.

இவர்க ளங்குச் செல்லும்போது நாடகசாலைகளிலிருந்து ஜனங்கள் வெளியில் வருகிறபடியால் அதிக சந்தடியாக விருந்தது. அந்தச் சந்தடியிலும் பத்திரிகை விற்கும் ஒரு பையனுடைய சத்தம்கேட்டது. அது "மிக்க விசேஷ அநு பந்தம்" என்று கூவிய சத்தம்.

186532

கிருஷ்ணராவ் ச[illegible]ன்று வாங்கிப் புன்னகையோடு [illegible] வீட்டில் நடந்த களவை[illegible]ற்றிப விஷயமே யிருக்கும்" என்று கூறிக் கொண்டே [illegible]வரிடம் அப்பத்திரிகையைக் கொடுத்தான். கருணாகரம்பி[illegible]ளை அதை வாங்கிப் பார்த்ததும் அ[illegible]ர் முக



186532

தில் உண்டான குறியால் கிருஷ்ணராவும் ஜகநாதனும் அவரை நெருங்கிப் பத்திரிகையிலுள்ள சாரத்தைப் பார்த்தார்கள். அதில்,

"காணமற்போன மதுரைநாயகம் பிள்ளையின் தேகம் சவச்சோதனை சாலையில் அகப்பட்டது"

என்று பெரிய எழுத்துக்களில் தலையங்கமிட்டு அதன் கீழ், "இன்று காலை மேலாபுரம் செல்லும் இரயில் பாதையில் ஒரு சவம் காணப்பட்டது. இரயிலில் அகப்பட்டு மிகவும் நசுங்கிப்போயிருந்தது. அது யாருடைய தேகம் என்று தெரியவில்லை. நாள் முழுமையும் அங்குள்ள சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்தும் ஒருவரும் அது யார் தேகமென்று அறியக்கூடவில்லை. பிறகு அது நகரத்திலுள்ள சவச்சோதனை சாலைக்குக் கொண்டு வரப்பட்டது. இன்றுகாலை இராக்காவலன் ஒருவன், 'அது பைத்தியக்காரர்சாலையிலிருந்து ஓடிப்போய் அகப்படாமலிருந்த மதுரைநாயகம் பிள்ளையின் தேகம்' என்று கூறினான்" என்று பிரசுரிக்கப்பட்டிருந்தது.

இதை வாசித்துப் பார்த்ததும் கருணாகரம்பிள்ளை "ஆகா, பார்த்தீர்களா. என்ன செய்வது?" என்றார். ஜெகநாதன் இது ஏதோ சூதான கட்டுக் கதையாயிருக்கும் என்று கருதினான்.

கிருஷ்ணராவ் அருகிலிருந்த வண்டி மேட்டுக்குச் சென்றுகொண்டிருந்த வண்டியை யழைத்ததும் மூவரும் அதிலேறிக்கொண்டு "விடு சீக்கிரம் சவக்கிடங்கிற்கு" என்றார்கள். அந்த வண்டிக்காரன் அந்நேரத்தில் சவக்கிடங்கிற்குப் போகிற காரியம் என்னவாயிருக்குமென்று வியப்படைந்து நோக்கினான்

## 22—வது அத்தியாயம்.

இருபத்தாறாவது வீதியின் கோடியில் சவக்கிடங்கிருக்கிறது. கிருஷ்ணாராவ் முதலிய மூவரும் செல்லும்போது அவ்வீதி ஏறக்குறைய நிர்ச்சந்தடியாகவிருந்தது. இலவணபுரி பிரம்மாண்டமான நகரமாகையால் அங்குள்ள சவக்கிடங்கில் எக்காலத்திலும் அனேகம் சவங்கள் அடையாளம் கண்டுபிடிக்கப்படாமல் கிடக்கும். காணாமற்போயிருக்கும் நண்பரையோ சுற்றத்தாரையோ தேடும் ஜனங்கள் எந்நேரமும் அக்கிடங்கில் சென்று பார்ப்பதும் வருவதுமாயிருப்பார்கள்.

சவத்தை இவ்வளவு காலம்வரை வைத்திருப்பது என்று ஒரு காலவரையுண்டு. அதுவரையில் அங்குள்ளார் சவம் அழுகாதபடி மருந்தூட்டி வைத்திருப்பார்கள். அதற்குச் சொந்தக்காரர் வந்து சவத்தைக் கண்டுபிடித்து விட்டால் அவர்களிடம் அளித்து விடுவார்கள். அப்படி யாரும் வராவிட்டால் நகரபரிபாலன சங்கத்தாரே அடக்கம் செய்து விடுவார்கள். அம்மாதிரி பிரதிதினமும் அனேகம் சவங்கள் அடக்கம் செய்யப்படும்.

இவர்கள் அங்குச் செல்லும்போது அன்று அடக்கம் செய்யப்படவேண்டிய சவங்களனைத்தும் வெளியிலனுப்பப்பட்டாயின. ஜனசந்தடியுமில்லை. இரண்டு மூன்று காவலர்கள் மட்டுமிருக்கிறார்கள். அவர்களில் ஒருவனிடம் கிருஷ்ணாராவ் தன் கையிலிருந்த பத்திரிகையைக் காட்டினான். அக்காவலன் "ஆ! ஆமாங்கோ; நான்தானுங்கோ; இது மதுரைநாயகம்பிள்ளையின் தேகம் என்று முதலில் கண்டுபிடித்துக் கூறினவன். இப்படிப்பட்டவர் நகரத்திற்குச் சமீபத்திலுள்ளவிடத்தில் நாள் முழுதும் விழு

கிடந்தும் ஒருவரும் அடையாளங் கண்டுபிடிக்கவில்லையென்றால் என்ன ஆச்சரியம் பாருங்கோ" என்றான்.

கிருஷ்ணராவ் "இங்கு வேறொருவரும் வந்து பார்க்கவில்லையோ" என்றான். காவலன் "இன்னுமில்லை. வெளியில் ஆளனுப்பி யாரையேனும் சவத்தை யெடுத்துக்கொண்டு போகும்படி கூற நேரமில்லை. ஆகையால் எங்களால் கூடிய மரியாதையோடு அதை வைத்திருக்கிறோம்" என்று கூறிக்கொண்டே வரிசையாக வைக்கப்பட்டிருந்த பெட்டிகளில் ஒன்றையிழுத்து அதன் மேல்மூடியைத் திறந்து காட்டினான்.

கருணாகரம்பிள்ளை குனிந்து பார்த்ததும் சட்டென்று பின்னிடைந்து "இது மதுரைநாயகமே" என்றார். ஜெகநாதனும் சட்டென்று குனிந்து பார்த்தான். அவனும் சட்டென்று பின்னிடைந்தான். ஆனால் கிருஷ்ணராவ் மட்டும் அதனருகில் உட்கார்ந்து அதை நன்றாக உற்று நோக்கத் தொடங்கினான்.

கருணாகரம்பிள்ளை மிக்க பிரமையோடு ஜெகநாதனை நோக்கி "இச்சவம் நகரின் ஓரத்தில் பகல் முழுமையுமிருந்ததென்றும், இங்கு வந்து இந்நேரமாயிற்று என்றும், இது காறும், இந்த ஆள் வரும்வரையில், ஒருவரும் இதை யார் என்று கண்டு பிடிக்கவில்லையென்றும் இங்குள்ளார் கூறுகிறார்கள். இத்தகைய சங்கதி சம்பவிக்கக்கூடியதே யென்று நீ எப்படிக் கருதுகிறாய்?" என்றார்.

ஜெகநாதன்:—"எனக்குப் புலப்படவில்லை. இங்குச் சவங்களை அடையாளங்களோடு குறிப்பிட்டு வைக்கவேண்டிய விஷயமே ஒழுங்காக நடைபெறவில்லையென்று தெரிகிறது. ஆயினும் முன் இருந்ததைவிட இப்போது சுமாரே" என்றான்.

கருணாகரம்பிள்ளை "அடடா! இது மிக்க கோரம்" என்று முகத்தைத் திருப்பிக்கொண்டார்,

ஜெகநாதன் இதைச் சிந்திக்கச் சிந்திக்க இது மிக்க துக்ககரமானதாகவே புலப்பட்டது. அவன் மனதில் பலவித யோசனைகளுதித்தன. அவற்றை நக்ஷத்திர பத்திரிகைக்கு அனுப்பலாமா என்று சிந்தித்தான்.

மதுரைநாயகம் பிள்ளையின் தேகத்தில் சில, பயங்கரமான காயங்கள் இருந்தன. கிருஷ்ணராவ் அவற்றைச் சோதித்தபடி யிருக்கிறான். ஆனால் அவன் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவருமில்லாதது ஒரு அதிஷ்டம். அவன் கூட்டத்தைச் சேர்ந்தவர்களன்னியில் வேறொருவருமில்லை.

ஜெகநாதன் காவலனை நோக்கி "இது எப்படி நேர்ந்ததென்று கருதுகிறாய்?" என்று வினவினான். காவலன் சந்தேகத்தோடு தலையசைத்து "அது யாருக்கும் தெரியாது. ஆனால் அவர் அந்தப் பைத்தியக்காரச் சாலையில் மிக்க துன்பத்தை யனுபவித்தார் என்று நினைக்கிறேன். அவர் எப்போதும் தமது பிரியத்தின்படி நடந்து கொண்டிருந்தவர் என்பது உமக்குத் தெரிந்ததே. அவர் போஜனம் செய்த பின் சமயம் பார்த்துக்கொண்டிருந்து தப்பித்துக்கொண்டு போய் விட்டார் என்று அங்குள்ளவர்கள் கூறுகிறார்கள். அவர் புத்தி சபலமடைந்திருக்கலாம். ஆயினும் அங்குக் கொண்டு போகப்பட்ட அத்தகைய ஆசாமிகளில் இவரைப் போல் தந்திரசாலி எவனுமிரான். அவரை வைத்துக்கொண்டிருக்க அவர்களால் முடியவில்லை" என்றான்.

ஜெகநாதன் "அதல்ல, இவன் எப்படி மரணமடைந்தான் என்று கருதுகிறாய்?" என்றான். காவலன் சற்றுநேரம் சிந்தனையோடு அவனை நோக்கினான். பிறகு "அய்யா நான் ஒன்றும் கூறமுடியாது. கடைசியில் இது தற்செ லாகவே நேர்ந்திருக்கலாகும். நீர் இவர் தேகம் இருந்த

தேசத்திற்கு எப்போதேனும் சென்றிருக்கிறீரா ?" என்றான். ஜெகநாதன், நான் எப்போதும் சென்றதில்லை என்றான்.

காவலன், "இந்த மின்சார இரயில் வண்டிகள் பூனை போல் ஒரு ஆளின்மேல் துரிதமாகப் பாய்ந்து விடுகின்றன. அங்குள்ள மரண விசாரணை யுத்தியோகஸ்தன் அவ்வாறு தான் கூறினான். அவனுக்குத் தெரிந்துதானே கூறியிருப் பான்? அச்சமயம் இரவு நேரமாயிருக்கும். இவர் எங்கே பிடித்துக்கொள்வார்களோ என்ற பயத்தால் சாதாரண பாட்டைகளில் செல்லாமல் இரயில் பாதையில் சென் றிருப்பார். உண்மை யின்னதென்று ஒருவரு மறியார் கள். அறியவும் முடியாதென்றே நினைக்கிறேன். ஆயி னும் அனேகருக்கு இது பெரு நஷ்டம். அவர் அனேகர்க்கு உதவிசெய்தார். துர்க்கையப் பிள்ளைக்கு இது நஷ்டத்தை யும் மனவருத்தத்தையும் உண்டாக்கியதென்று கேள்விப் படுகிறேன்" என்றான்.

ஜெகநாதனும், கிருஷ்ணாராவும் ஒரு மூலைக்குச் சென்ற பின், கருணாகரம்பிள்ளை "கடைசியில் ஒரு சங்கதி, அதாவது அக்கறுப்புப் புத்தகம் என்ன கதியாயிற்று என்று சிந்திப் பவர்களில் ஒருவன் மறைந்து விட்டான். அதைப்பற்றி உண்மையில் அவனுக்கு என்ன தெரியுமென்பது புலப்பட வில்லை. எத்தகைய இரகசியம் அவனோடேயே மறைந்து விட்டதோ?" என்றார்.

ஜெகநாதன், "எனக்குப் புலப்படவில்லை. ஆயினும் ஒரு விஷயம். இச்சம்பவம் உபயாம்பாளின் பீதியை ஒருவாறு குறைத்துவிடும். அவன் ஒருவன் ஒழிந்தால் துர்க்கையன் விருந்தில் நடந்த இரகசியம் வெளிவரும் மார்க்கங்களில் ன்று குறைந்தது" என்றான். கருணாகரம்பிள்ளை யொன் பதில் கூறவில்லை.

அச்சமயம் கிருஷ்ணாராவ் தன் சோதனையை முடித்து

விட்டு எழுந்து நின்றதைக் கண்ட இருவரும் சட்டென்று அவனருகிற் சென்றதும் "என்ன சங்கதி? என்ன கண்டு பிடித்தாய்?" என்றார்கள்.

கிருஷ்ணராவ் உடனே பதிலளிக்கவில்லை. கடைசியில் நிதானமாக "நான்...நான் சொல்லமுடியாது. உண்மையில்—நானே—நானே யறிந்து கொள்ளும் வரையில் கூற எனக்கு விருப்பமில்லை" என்றான்.

முன் அநுபோகத்தால் அவனை மறுபடி ஒன்றும் கேட்பதில் பயனில்லையென்று ஜெகநாதன் அறிவான். கிருஷ்ணராவ் ஒரு விஷயத்தை யெள்ளளவு ஐயமுமின்றித் தன் மனதார உணருமட்டும் இன்னொருவர்க்குக் கூறும் சுபாவமுடையவனல்ல. ஜெகநாதன் "கடைசியில் மதுரைநாயகம் பிள்ளை சூதாகக் கொலை செய்யப்பட்டே யிருப்பானோ? அப்படி யிருந்தால் யாரால்" என்று தனக்குள் சிந்தித்துக் கொண்டான். ஏனெனில் துப்பாக்கி, ஈட்டி, கத்தி முதலிய எந்த ஆயுதத்தாலேனும் ஒருவனைக் கொன்று தேகத்தை இரயில் பாதையில் போட்டு விட்டால் வண்டி யதன்மேலேறி தேகத்தைச் சின்ன பின்னமாக்கி விடுகிறது. பிறகு காண்போர்க்கு வண்டியிலகப்பட்டு மனிதன் மடிந்ததாகப் புலப்படுமேயன்றி, மிக்க சூக்குமமான நுட்ப சோதனை செய்தாலன்றி உண்மைக் காரணம் புலப்படாது.

* * * *

கருணாகரம்பிள்ளையின் வீட்டில் களவுபோன சங்கதியைப் பற்றிய இரகசியம் சிக்கிரமாகவே வெளிவந்து விட்டது. அது சீர்திருத்தச் சங்கத்திலுள்ள ஒரு ஆளால் இரகசிய வழியாகவே வெளிவந்தது. சீர்திருத்தச் சங்கத்தில் ஒரு இலிகிதன் இருக்கிறான். அவன் வெளிக்கு இலிகிதனாக விருப்பானேயன்றி உண்மையில் அவன் ஒரு இ... சியத் துப்பறிவோனேயாகும். அத்துப்பறிபவன் ...

கண்டறிந்து வந்ததைக் கருணாகரம் பிள்ளையிடம் கூறினன். அவர் கிருஷ்ணராவிடமும் ஜெகநாதனிடமும் பின்வருமாறு கூறினர்:—

"நண்பர்களே! நான் ஒரு கட்சியின் தலைவன். என் கட்சிக்காரர் என்னை யுண்மையானவனென்றும், சுயநலங் கருதாது வேலைசெய்கிறவனென்றும், என் உண்மைப்படியே நம்பியிருக்கிறார்கள். மதுரைநாயகம் பிள்ளை என் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவன். உபயாம்பாள் அவன் சிநேகி யென்றும், அவனோடு எதிர்க் கட்சித் தலைவனாகிய துர்க்கை யன் வீட்டு விருந்திற்குச் செல்பவள் என்றும் யாவர்க்கும் தெரியும். விவகாரம் இவ்வாறிருக்கையில் நான் உபயாம் பாளிடமும் மதுரைநாயகம் பிள்ளையிடமும் மிக்க அந்நி யோன்னியமாகவிருப்பதாய் என் கட்சிக்காரருக்குத் தெரிந் தால் அவர்கள் என்ன கருதுவார்கள். நான் சுயநலங்கருதி உள்ளுக்குள் எதிரிகளிடம் உறவு செய்து கொண்டதாய்க் கருதுவார்களல்லவா?

இவர்கள் இப்போது எனக்கு அத்தகைய கெடுதி செய்யவே மிக்க தந்திரமான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார் கள். எப்படியெனில் முன்னே என் வீட்டில் சில புகைப் படங்கள் களவுபோய்விட்டனவென்று பிரஸ்தாபமுண் டாக்கிவிட்டால் ஜனங்கள் ஓகோ இதில் என்னமோ விசேஷமிருக்கவேண்டும் என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். நாளைக்கு அப்பிரசுரம் பத்திரிகை களில் வெளியாகிவிடும். பிறகு சில புகைப்படங்கள் பத்திரிகைகளில் வெளிவரும்" என்றதே,

[கி]ருஷ்ணராவ்:—"என்ன? உண்மையான படங்களா?" என்றான்.

[கருணா]கரம்பிள்ளை:-"இல்லையில்லை; எல்லாம் கள்ளப்படங்கள்.

இவர்கள் நானும், உபயாம்பாளும் நேசமாகப் பேசிக் கொண்டிருப்பது போலும், நானும் உபயாம்பாளும் மதுரைநாயகம் பிள்ளையும் ஒன்றாகச் சினேகபாவமாய்ப் புழங்குவதுபோலவும், இம்மாதிரிச் சில படங்களை யுற்பத்தி செய்திருக்கிறார்கள். அவை பிறகு பத்திரிகைகளில் வெளிவரும். அதுமட்டுமல்ல. அவற்றிற்குத் தக்கபடி, அதாவது அவர்களுக்கு அநுகூலமானபடி அவைகளுக்குக் காலத்தையும் ஏற்படுத்திக்கொண்டார்கள். ஒரு படத்தில் நானும் உபயாம்பாளும் இன்னொரு மாதும் இருப்பதாகப் பிடிக்கப்பட்டிருக்கிறது. அம்மாதை நான் இரண்டொரு கூட்டங்களில் கண்டு மட்டுமிருக்கிறேனேயன்றி அவளோடு நான் பேசியதுமில்லை, சத்தியமாய் அவள் யாரென்றே யெனக்குத் தெரியாது. இவ்வேலை ஆதிமுதல் அந்தம்வரையில் ஒரே பெரும் பொய். இதனால் என் கட்சியாட்களுக்கு என்மேல் இருக்கும் நம்பிக்கை போய்விடக் கூடுமே யென்பதுதான் இப்போதுள்ள கலக்கம்.

வெளித்தோற்றமாகக் கொஞ்சம் ஆதாரமிருந்தால் சாதாரண ஜனங்கள் எதையும் நம்பி விடுவார்கள். அதிலும் இத்தகைய அத்தாட்சியிருக்கும்போது ஐயமின்றி நம்பி விடுவார்கள். இது சூதாகவிருக்கலாகுமென்று கருதி இந்த ஆழ்ந்த மர்மங்களையெல்லாம் கண்டு பிடித்து உண்மையை யறியும் சாமார்த்தியம் எல்லாருக்கும் உண்டென்று கருதலாகுமோ? இவ்விஷயம் முன்பே நடந்திருந்தால் நான் சட்டை செய்யமாட்டேன். அப்போது இவர்களோடு யுத்தம் புரிந்து இவர்கள் அக்கிரமமான பொய்யை வெளிப்படுத்த நமக்கு அவகாசமிருக்கும். இப்போது அடுத்த சனிவாரம் கடைசி நாளாக விருக்கிறது. நாம் என்ன செய்யமுடியும். அத்துஷ்டர்கள், நாம் வாயால் எவ்

வளவு தான் மறுத்துக் கூறினும் அத்தகைய அத்தாட்சிகளைப் பொய்ப் படுத்த முடியாதென்று கருதுகிறார்கள்" என்றார்.

அவர் மனக்கலக்கத்தோடு கூறிய சங்கதிகள் யாவும் கவனமாகக் கேட்ட ஜெகநாதன் "ஆம். இதுவே அவர்களுக்குத் தைரியத்தை யுண்டாக்கியிருப்பது. பணம் கொடுத்து அவர்களைச் சரிப்படுத்திக் கொள்ளவேண்டும். வேறு வழி யெனக்குப் புலப்படவில்லை" என்றான்.

கருணாகரம்பிள்ளை, "ஆனால் இவையாவும் அடியோடு பொய். கடைசி முயற்சியாய்த் துர்க்கையன் செய்த வேலை யிது. வேறு வழியில்லாததால் அவன் இப்படிச் செய்தான். கள்ளப்பத்திரம் உற்பத்தி செய்வதைவிட இது மிக்க இழிவான வேலை. மனிதர் கண்களைப் படங்கள் சீக்கிரம் கவரும். இதுவே மிக்க அபாயமானது. தெரிந்தெடுப்புக் காலம் நெருங்கியுள்ள சமயத்தில் இது எவ்வளவு கெடுதி செய்யுமென்பதை யவன் அறிவான். நான் இதை மறுதலிப்பதோடு இது கள்ளத்தனமாக உற்பத்தி செய்யப்பட்டதென்று நிரூபித்தாலுங்கூட தீங்கு நேர்ந்தே தீரும் என்று அஞ்சுகிறேன்" என்று கூறிவிட்டுத் திகைப்போடு இருவரையும் மாறி மாறி நோக்கி, "நமக்கு இரண்டொரு வாரங்கள் அவகாசமிருந்தால் நலமாகவிருந்திருக்கும். அவர்கள் இவற்றைப் பகிரங்கப்படுத்துமுன், இன்று நான் இதைப்பற்றிப் பிரஸ்தாபிப்பது முட்டாள்தனமாகும். திங்கள் செவ்வாய் இந்நாட்களில் பத்திரிகை மூலமாக இதை மறுத்துக்கூற எனக்கு அவகாசமில்லை" என்றார்.

இதுவரை யவர் கூறுமட்டும் கிருஷ்ணராவ் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தான். கடைசியில் "அப்படங்களின் நகல்கள் தங்களிடம் இருக்கின்றனவா?" என்றான். கருணா

கரம்பிள்ளை "இல்லை. ஆனால் அவ்வேலைக்காரர்கள் இன்று காலை யனுப்புவதாய்க் கூறினார்கள்" என்றான்.

கிருஷ்ணராவ் உம் என்று தனக்குள் சிந்தித்துக் கொண்டே "களவாடப்பட்ட கடிதங்களையும், கள்ளக் கடிதங்களையும்பற்றி விவகாரம் நடத்தியிருக்கிறோம். ஆனால் களவாடப்பட்ட புகைப்படங்கள் நமது அனுபவத்திற்கு புதிதே. கருணாகரம் பிள்ளையவாள்; தாங்கள் பீதியடைவதற்கு நான் அச்சப்படவில்லை. ஜெகநாதம் பிள்ளை அவற்றிற்காகப் பணம் கொடுத்து வாங்கலாம் என்கிறார். ஆனால் நீர் கூறுவது போல ஒரு கை பார்ப்பதுதான் நலம் என்று நான் கருதுகிறேன்" என்றான்.

கருணாகரம்பிள்ளை "அப்படியாயின் காரியம் மிஞ்சி விடுமுன் இதன் காரணகர்த்தாவைக் கண்டுபிடித்துவிடுகிறேன் என்கிறாயோ?" என்று ஆவலோடு கேட்டார்.

**கிருஷ்ணராவ்:**—"நான் இன்னும் அவ்வாறு செய்வேன் என்று கூறவில்லையே" என்றான்.

**கருணாகரம்பிள்ளை:**—"ஆ! கிருஷ்ணராவ்! நீ என்னைக் கைவிடமாட்டாயல்லவா?" என்றார்.

கிருஷ்ணராவ் நகைத்துக்கொண்டே அவர் தோள் மேல் கையை வைத்து, "தாங்கள் அந்த நாடோடியாகிய உபயாம்பாளிடம் முட்டாள்தனமாய் சொல்ப சினேகமாவது வைத்துக் கொண்டீர்கள் என்பதை நான் அறிந்தது முதல் இத்தகைய ஏதோ ஒரு ஆபத்து நேரிடுமென்றே அச்சங்கொண்டிருந்தேன். நேராய் யுத்தம் புரிவதே சரியான மார்க்கம். பணம் கொடுத்தேனும் வேறு எந்தவிதமாகவேனும் அவற்றைப் பெறமுயல்வது அவை யுண்மையென்று ஒப்புக்கொள்வதாகும். ஆகைபால் துர்க்கையன் அதற்கு ஒப்புக்கொண்டு அவ்வழியாகவே அது மெய்யென்று நிரூபித்து விடுவான். புகைப்படங்களைக் கொண்டு

ஒரு துஷ்டன் என்ன கெடுதி செய்யக்கூடுமென்று கூற முடியாது. ஆயினும் இதற்கு வேறு மார்க்கமிருக்கவேண்டும்" என்றான்.

கருணாகரம்பிள்ளை:—"ஆம். நீ எவ்வளவு கஷ்டத்திற்கும் பின்னிடையவேண்டாம். செலவு எவ்வளவு நேர்வதாயினும் சரி. இலக்ஷ்மணசாமியையேனும் வேறு யாரையேனும் தாக்கநேர்ந்தாலும் சரி. அப்படங்களைக் கைப்பற்றிக்கொள். காரியம் மிஞ்சிவிடுமுன் அதைச் செய்துவிடு. இதனால் உண்டாகக்கூடிய கெடுதி இத் தெரிந்தெடுப்பு விஷயத்தில் நேர்வது மட்டுமல்ல" என்றார்.

அவர் கடைசியில் கூறியதைக் கேட்ட கிருஷ்ணராவ் அவர் முகத்தை யுற்று நோக்கினான். அவர் வேறு என்ன கெடுதியைப்பற்றிக் கூறுகிறார் என்பதைக் கிருஷ்ணராவும், ஜெகநாதனும் அறிந்துகொண்டார்கள். அதென்னவெனில், கருணாகரம்பிள்ளை எதிர்க் கட்சித் தலைவர்களோடு சகவாசம் வைத்துக்கொண்டிருந்தார் என்பதோடு அவருக்கும் உபயாம்பாளுக்கும் ஒரு விதமான சினேகம் உண்டாகியிருந்ததென்று அழகாம்பாளுக்குச் சந்தேகம் ஜனித்து விட்டால் என்ன நேரிடுமோ என்ற அச்சமே அவரை பதிகமாக வாதித்தது என்பது தெரிந்தது.

அழகாம்பாள் விஷயத்தில் இலக்ஷ்மணசாமிபிள்ளை, கருணாகரம்பிள்ளைக்குப் போட்டியாயிருக்கிறான். இவ்விஷயத்தில் இவர் தோல்வியடைந்து அவமானமுண்டாய் விட்டால் இலக்ஷ்மணசாமிப்பிள்ளை "பார்த்தாயா நீ நட்புக் கொண்டு யோக்கியனென்று நம்பிய மனிதன் அந்த நாடோடியாகிய உபயாம்பாளிடம் சினேகங்கொண் டிருந்திருக்கிறான்" என்று அழகாம்பாளைக் கேலி செய்வான். அவள் அப்போது என்ன நினைப்பாள் என்பதே கலக்கம்.

கிருஷ்ணராவும், ஜெகநாதனும் கருணாகரம்பிள்ளையிட மிருந்து தங்கள் வாசஸ்தலத்திற்குத் திரும்பினார்கள். கிருஷ்ணராவ் இதன் உண்மையைக் கண்டுபிடித்தே தீர வேண்டுமென்று ஆவல் கொண்டபடியே ஜெகநாதனும் கருதினான். இருவரும் வீதியில் செல்லும்போது கிருஷ்ண ராவ் "நான் முன்னே அழகாம்பாளைக் காணவேண்டும்" என்றான்.

அது ஆபத்தான காரியமென்று ஜெகநாதனுக்குத் தோன்றியது. ஆயினும் கிருஷ்ணராவ யாவுமறிந்தே கூறி யிருப்பான் என்று எண்ணிக்கொண்டான். இவர்கள் இரு வரும் நேராய்ச் சீர்திருத்த சங்கத்தின் காரியாலயமிருக்கும் கட்டிடத்திற்குச் சென்று உள்ளே நுழைந்தார்கள். அதி காலையாயிருந்தும் அதற்குள்ளாகவே அங்கு வேலை மும்முர மாக நடைபெறுகிறது. லிகிதர்கள் ஒருபக்கம் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அச்சடிப்போர் பத்திரிகைகளி லிருந்து சமாசாரத்துண்டுகளைக் கத்தரித்துச் சேகரம் செய்துகொண் டிருக்கிறார்கள்.

கருணாகரம்பிள்ளையின் காரியாலயம் அக்கட்டிடத்தின் மத்தியிலிருக்கிறது. அங்கும் வேலைகள் நடந்துகொண் டிருக்கின்றன. அதன் ஒரு புறத்தில்தான் அச்சிலாகா விருக்கிறது. அதற்குத் தலைமை வகிக்கும் அழகாம்பாள் மிக்க சிரத்தையோடு என்ன வேலையோ செய்துகொண் டிருக்கிறாள். கிருஷ்ணராவும் ஜெகநாதனும் அங்குச் செல் லும்போது அவள் முதுகை யிவர்கள் பக்கம் திருப்பிக் கொண்டிருந்தாள். இவர்கள் வந்த சந்தடியைக் கேட்டதும் சட்டென்று திரும்பினாள். அவள் முகக்குறியால் என்னவோ விசேஷமிருக்கிறதென்று புலப்பட்டது.

கிருஷ்ணராவ் சற்றும் ஆலசியம் செய்யாமல் நேரே விஷயத்தைக் கூறத் தொடங்கினான். அழகாம்பாளுடை

ஆசனத்தினெதிரிலுள்ள மேஜையின் மறுபுறம் இருவரும் உட்கார்ந்ததும் கிருஷ்ணராவ் குனிந்து மெதுவாய் "அழகாம்பாள்! நான் உன்னைப் பூரணமாக நம்பியே யிங்கு வந்தேன். நான் கருணைகரம்பிள்ளையைப் பற்றிய ஒரு முக்கிய விவகாரத்தைப் பற்றி யுன்னிடம் பேசவந்தேன்" என்றான். அதைக்கேட்ட பின் அவள் முகக்குறியால் ஒன்றும் அறியக் கூடவில்லை.

கிருஷ்ணராவ் "இச்சங்கதி யுனக்குத் தெரிந்திருக்குமோ வென்னமோ எனக்குத் தெரியாது. கருணைகரம்பிள்ளையின் பெயரைக் கெடுக்க ஒரு முயற்சி நடக்கிறது. இராஜாங்க சம்பந்தமான இத்தகைய விஷயத்தில் எதிரிகள் எங்கும் வேவு ஆட்களை வைத்திருக்கலாகும்" என்றான்.

அழகாம்பாள், "நானே அதைப்பற்றிச் சில வேளைகளில் சிந்தித்திருக்கிறேன். ஆயினும் எனக்கு இதைப்பற்றி யவ்வளவாகத் தெரியாது. ஆயினும் இக்காரியாலயத்தில் அத்தகையோர் அறியக்கூடியது ஒன்றுமில்லை" என்றாள்.

கிருஷ்ணராவ் அவளை யுற்று நோக்கினான். அவள் அதையறிந்து, "நான் இதை நம்பக் கூடவில்லை. ஓ! கிருஷ்ணராவ் இச்சங்கதி என்காதில் விழாதிருந்தால் நன்றாகவிருக்கும். ஆயினும் அதையறிந்தே தீரவேண்டும் என்பது எனக்குத் தெரியும்" என்றாள்.

கிருஷ்ணராவ், "அழகாம்பாள்! நான் கூறுவதை நம்பு. நீ யதை யறிந்தே தீரவேண்டும். நான் அனேக விஷயங்களுக்கு உன்னையே நம்பிக்கொண்டிருக்கிறேன். ஆனால் இதை யெப்படி முன்னடியே யறிந்துகொண்டாய் என்பதை எனக்குக் கூறு. நான் இது இதற்குள் உனக்குத் தெரிந்திருக்கும் என்று கருதவில்லை.

அழகாம்பாள் முகம் வெளுத்து விட்டது. அவள் சொல்லொணுக் குழப்பத்தோடு "என்னிடமுள்ள இரகசியத்

துப்பறிபவர்களில் ஒருவன் இப்படங்களை இங்கு கொண்டு வந்துவிட்டான். ஒருத்தி தவருக அதைப் பிரித்து விட்டாள். யாவரும் பார்த்து விட்டார்கள். பிறகு நான் எப்படிப் பார்க்காதிருக்க முடியும்?" என்ருள்.

கிருஷ்ணராவ் "அழகாம்பா! நீ சற்று பொறுமையாயிருக்க வேண்டுமென்று நான் வேண்டிக் கொள்கிறேன். நீ இதை யிவ்வளவு விபரீதமாய்க் கருதுவா யென்று நான் எண்ணவே யில்லை. உண்மையில் நான் அப்படிக் கருதவே யில்லை. அம்மா! ஒன்றுமட்டும் கூறுகிறேன். இப்படங்களின் வார்த்தைகளில் எப்படிப் பொய் யிருக்கின்றதோ அப்படியே யிவற்றிலுமிருக்கும் என்பதை மட்டும் மனதில் வை" என்ருன்.

அழகாம்பாள், "தாங்கள் கூறுவது சரியென்றே நான் நம்புகிறேன். ஆனல் இந்த விஷயத்தால் என் மனம் முறிந்து விட்டது. நான் என் பதவியை இராஜிநாமா கொடுத்துவிடச் சித்தமா யிருக்கிறேன். நான் கருணுகரம் பிள்ளையைப்பற்றி யாரிடமும் ஒன்றும் கூறமாட்டேன். ஆனல் கடைசியில் இலக்ஷ்மணசாமிப்பிள்ளையின் வார்த்தையே மெய்யாகிவிடுகிறதே என்று கருதும்போது என் மனம் சொல்லொணு வேதனை யடைகிறது. 'எவனும் தக்க இலாபத்திற்கே வேலை செய்கிருன். அது கிடைத்தால் துரோகம் செய்து விடுவான்' என்று அவன் எப்போதும் கூறுவது வழக்கம். அந்தோ! இது இக்கட்சிக்கே—சீர்திருத்தகட்சிக்கே பெருந்தீங்கை விளைவித்து விடும். எனக்கு எதையும்...நம்பக்கூடவில்லை" என்ருள்.

கிருஷ்ணராவ் இன்னும் அவள் முகத்தைக் குறிப்பாய் ஆவலோடு நோக்கிக் கொண்டே, "அழகாம்பாள்! தயவு செய்து நான் கூறுவதைக்கேள். உடனே எதையும் நம்பாதே. முதலில் உண்மை தெரியுமட்டும் எதிலும் முன்னபே

யுண்டாகி யிருக்கும் நம்பகத்தை விட்டு விடாதே. அதுவரை யில் பொறுத்துப்பார்—" என்றதே,

அழகாம்பாள், "என்ன? பொறுப்பதா? நான் எப்படிப் பொறுப்பது? நான் கருணாகரம் பிள்ளையை யவர்—மதுரை நாயகம்பிள்ளையிடம் அறிமுகமா யிருப்பதற்கே வெறுக்கிறேன். அவனைப் போன்ற அத்தகைய மனிதனோடு இரகசியமாகச் சிநேகம் வைத்துக் கொள்வது—சே சே..." என்று கூறிக்கொண்டே தன் உதட்டைக் கடித்துக்கொண்டாள். அச் செய்கையால் இவ்விஷயம் எவ்வளவு வரையில் அவள் மனதைப் பாதித்திருக்கிற தென்பது நன்கு விளங்குகிறதன்றோ.

கிருஷ்ணராவ் "தயவுசெய்து இதைப்பற்றிச் சற்று சிந்தி. அவசரப்பட்டு ஒரு தீர்மானத்தைச் செய்து விடாதே. உன் தீர்மானத்தை யொத்திவை. அதனால் நீ பின்னால் ஒரு போதும் மனவருத்தமடைய மாட்டாய்" என்று கூறிவிட்டுக் கடைசியில் "எதோ அப்படங்களை நான் காணட்டும்" என்றான்.

அழகாம்பாள் அப்படங்களைக் கரத்தால்கூடத் தீண்ட விரும்பாதவள்போல் "அவை கருணாகரம் பிள்ளையின் காரியாலயத்திலேயே யிருக்கின்றன" என்றாள்.

கிருஷ்ணராவும் ஜெகநாதனும் எழுந்து கருணாகரம் பிள்ளையின் காரியாலயத்திற்குச் சென்றார்கள். அங்குப் போய்க் கேட்டபோது அப்படங்கள் மறுபடி யொரு சிப்பமாகக் கட்டப்பட்டு அச்சிப்பத்தின்மேல் 'தவறாகப் பிரிக்கப்பட்டது' என்று எழுதப்பட்டிருந்தது.

கிருஷ்ணராவ் அதைப் பிரித்துப் பார்த்தான். உண்மையாகவே கருணாகரம்பிள்ளை கூறிய மாதிரி படங்கள் அதிலிருந்தன. ஒன்றில் கருணாகரம் பிள்ளையும், உபயாம்பாள், மதுரைநாயகம் பிள்ளையும், அவர் கூறிய இன்னொரு மாதும்

ஒரு விடத்திலிருப்பது போலவும், இன்னொரு படத்தில் இவர்கள் நால்வருமே ஒரு மோடார் வண்டியில் செல்வது போலும் இருந்தது. வேறு சில படங்களு மிருந்தன.

ஜெகநாதன் அவற்றைப் பார்த்து ஒன்றும் கூறவில்லை. ஆனால் அவன் இதுகாறும் கருணாகரம்பிள்ளையைப் பற்றிப் பலர் கூறிக்கொண்டிருந்ததைக் கருதியபோது இது மிக்க சந்தேகமானதாகவே அவனுக்குத் தோன்றியது. அதாவது இவை கருணாகரம் பிள்ளைக்கு மிக்க பிரதிகூலத்தையே யுண்டாக்கு மென்று கருதினான்.

ஆனால் கிருஷ்ணாராவ் அப் படங்களைச் சோதித்துப் பார்த்தபின் ஒன்றும் கூறாமல், அவற்றைக் கருணாகரம் பிள்ளையின் பார்வைக்காக அங்கேயே வைத்து விடாமல் தான் அவற்றை யெடுத்துக் கொண்டு அவருக்கு ஒரு கடிதம் எழுதி வைத்து விட்டான்.

கிருஷ்ணாராவ் அப்படங்களை யெடுத்துக் கொண்டு மறுபடி அழகாம்பாளிடம் சென்று சம்பாஷித்தான். ஜெகநாதன் அச்சம்பாஷணை முழுமையும் கேட்கவில்லை. ஆனால் அழகாம்பாளுடைய ஒரு வாக்கியம் மட்டும் அவன் மனதில் உறுத்தியது. அதாவது,

"எனக்கு மிக்க வருத்தத்தை யுண்டாக்குவது எதுவெனில், அவர் சற்றுநேரத்திற்கு முன்பு டெலிபோனில் என்னைக் கூப்பிட்டு எனக்கு இச்சங்கதிக ளெல்லாம் தெரிந்த பின்பும்—என்னிடம் பழைய மாதிரியாகவே பேச முயன்றார். ஆயினும் நான் அவர் குரலாலேயே அறிந்து கொள்வேன். எதையோ எனக்குத் தெரியாமல் மறைத்து வைப்பதாக அவர் மனதிற்கே தெரியும்" என்றாள்.

இதற்குப் பதில் கிருஷ்ணராவ் கூறிய தென்னவென்று ஜெகநாதனுக்குத் தெரியாது. ஆனல் அந்த விடை யவள் மனதில் அவ்வளவாய் நல்ல அபிப்பிராயத்தை யுண்டாக்கிய தென்று மட்டும் அவன் மனதிற்குப் புலப்படவில்லை.

---

## 23—வது அத்தியாயம்.

கிருஷ்ணராவும், ஜெகநாதனும் அழகாம்பாளிடம் விடைபெற்று அங்கிருந்து தங்கள் வாசஸ்தலத்தை நோக்கிச்சென்றார்கள். வழியில் கிருஷ்ணராவ் "எல்லாவற்றிலும் இதுதான் மிக்க வருத்தமானதும், மோசமானதுமாகிய விஷயம். இவள் யாவற்றையும் உண்மையேயென்று நம்புகிருள். பெண்புத்தி ஆத்திரமுடையது. தன் விரோதியாகிய உபயாம்பாளிடம் நேசம்வைத்துக்கொண்டானே என்ற பொருமையே யவள் மனதில் கருணகரம்பிள்ளை மேல் வெறுப்பை யுண்டாக்கிவிட்டது. முன்பு அவள், அவர், மதுரைநாயகம்பிள்ளையிடம் அறிமுகமாயிருக்கிருர் என்பதே யெனக்கு மிக்க வருத்தத்தை யுண்டாக்கியது என்று கூறினளே, அப்போது மிக்க சாமார்த்தியமாய் உபயாம்பாள் என்ற பெயருக்குப் பதிலாக மதுரைநாயகம் என்று கூறினள். மாதர்க்குக் காதல் விஷயத்தில் உண்டாகும் பொருமையை யவ்விட்டுக் கூறமுடியாது" என்ருன்.

ஜெகநாதன் ஒன்றும் மறுமொழி பகரவில்லை. என்ன கூறுவது ? சாதாரணமாக ஜனங்களெல்லாம் இப் பொய்யானக் கட்டுக்கதையை நம்புவதாயின் கருணகரம்பிள்ளைக்கு அழிவே நேரிடுமென்றுமட்டும் அவன் மனதிற் புலப்படுகிறது. ஆனல் கிருஷ்ணராவின் சாமார்த்தியத்தால் இவ் விவகாரங்கள் எப்படித் திரும்புமோ என்று சிந்திக்கும் போது முடிவு என்னவிதமாகுமென்று அவன் புத்திக்கு

எள்ளளவும் எட்டவில்லை. "ஆச்சரியமான விதமாய் உண்மையே பெரும்பாலும் வெளியாகும். கடவுள் அவ்வாறே முடிய அருள்செய்யவேண்டும்" என்று தனக்குள் எண்ணிக்கொண்டான்.

தூர்க்கையன் மிக்க துணிகரமாய் வேலை செய்கிறான். அவனுடைய அயோக்கியதை யெவ்வளவாயினும் அவன் துணிகரம் யாவர்க்கும் மிக்க வியப்பை யுண்டாக்கிற்று.

கருணாகரம் பிள்ளைக்கு உண்டான ஆபத்துகளை நோக்க வேறொரு ஆளாகவிருந்தால் இடி விழுந்து உட்கார்ந்து விட்டிருப்பான். துரைத்தன வக்கிலாகிய கருணாகரம்பிள்ளையோ ஆபத்து எவ்வளவு அதிகமாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதிக உற்சாகத்தோடு வேலை செய்யத் தொடங்கினார். அவருக்கும் தூர்க்கையனுக்கும் உண்டான சண்டை அதிகமாய் முற்றிப்போய்க் கடைசியில் ஒருவருக்கொருவர் சற்றும் விவகாரத்தை விட்டுக்கொடுக்காத நிலைமைக்கு வந்து விட்டது.

கிருஷ்ணாராவ் இரசாயன சாலைக்குச் சென்றதும் அப்படங்களை நன்றாகக் கவனிக்கத் தொடங்கினான். மாலைப் போது டெலிபோனில் யாரோ கூப்பிடும் மணியடித்தது. அதைக் கேட்டதே கிருஷ்ணாராவ் "நீ போய்க் கேள்" என்று ஜெகநாதனுக்குச் சமிக்கை காட்டினான். ஜெகநாதன் எழுந்து செல்லும்போது மறுபடி "அது கருணாகரம்பிள்ளையாயின் நான் இங்கில்லையென்றும் அவரிடம்பேச இன்னம் ஆயத்தமாகவில்லையென்றும் கூறிவிடு" என்றான்.

ஜெகநாதன் டெலிபோனருகிற்சென்று அதிலுள்ள குழலை யெடுத்துச் செவியில் வைத்ததும் கூப்பிடுவது கருணாகரம்பிள்ளையே யென்பது தெரிந்தது. அவர் "மிக்க சங்கதியிருக்கிறது. உடனே கிருஷ்ணாராவைப் பார்க்கவேண்டும்" என்றார்.

ஜெகநாதன் கிருஷ்ணராவ் கூறியபடி கூறத்தொடங்கிப் பாதி கூறுவதற்குள் கருணாகரம்பிள்ளை ஆத்திரத்தோடு "ஜெகநாதம்! என்னவென்று நினைக்கிறாய் ? கிருஷ்ணராவை யுடனே வரச்சொல்லு. சம்பவிக்க முடியாத விஷயம் சம்பவித்தது. நான் ஜட்கா சுப்பனைப் பார்த்தேன். அவன் ஒப்புக்கொண்டான். பெரிய விஷயம். கிருஷ்ணராவ் வருமட்டும் நான் என் காரியாலயத்தில் காத்துக்கொண்டிருக்கிறேன் என்று அவனிடம் கூறு" என்றுகூறித் தன் டெலிபோன் கருவியை மூடி விட்டார்.

இச்சங்கதிகளைக்கேட்டதும் கிருஷ்ணராவுக்கே கருணாகரம்பிள்ளையைச் சீக்கிரம் காணவேண்டுமென்று ஆவலுண்டாயிற்று. அவன் துரிதமாய்ப் புகைப்படங்களைச் சோதனை செய்யும் வேலையை முடித்து விட்டான். முதலில் அவன் அங்கில்லையென்று கருணாகரம்பிள்ளைக்குக் கூறிய பொய்யை ஸ்திரப்படுத்தச் சற்றுநேரம் ஆலசியம் செய்து பிறகு இருவரும் புறப்பட்டார்கள்.

அவர்களிருவரும் கருணாகரம்பிள்ளையின் காரியாலயத்திற்குள் நுழைந்தபோதே ஏதோ விசேஷம் நேர்ந்திருக்கிறதென்று தெரிந்தது. முன் அறையிலிருந்த சமாசாரம் சேகரிக்கும் லிகிதர்கள் குசு குசுவென்று பேசிக்கொண்டும் துரிதமாக ஏதோ குறிப்புகளெடுத்துக்கொண்டு மிருந்தார்கள். கருணாகரம் பிள்ளை தமதறைக்கு முன்னிருக்கும் அறையில் இவர்களைச் சந்தித்தார். அவர் மிக்க மனக்கிளர்ச்சியோடிருந்தார். அவர் மனம் நாம் எப்படி மறுபடி அழகாம்பாளின் நம்பிக்கையையும் நட்பையும் பெறலாம் என்ற சிந்தனையிலிருந்தது. கிருஷ்ணராவ் புகைப்பட விவகாரத்தை யெப்படியும் சரிப்படுத்திவிடுவான் என்ற நம்பிக்கையால் அப்படங்களைப்பற்றிக் கூடக் கிருஷ்ணராவை யொன்றும்

கேட்காமல் தாழ்ந்த குரலாய்ச் சங்கதியைக் கூறத்தொடங்கினர்:—

"ஜட்கா சுப்பன் தண்டனை யடைந்தது முதல் நான் அவன் நடந்த விஷயங்களை யொப்புக்கொள்ளச் செய்ய என் ஆட்களைவிட்டு முயற்சி செய்துகொண்டே யிருக்கிறேனென்ற விஷயம் நீங்களறிந்ததே. அவன் உண்மையைக் கூறி யொப்புக்கொண்டால் அவனைத் துரைத்தன சாக்ஷியாக எடுத்துக்கொண்டு அவனுக்கு மன்னிப்பளிப்பதாகவும் அவன் அப்படி யொப்புக்கொள்ளாவிட்டால் மிக்க கெடுதி செய்வதாகவும் பயமுறுத்தினேன்.

அவைகளில் ஒன்றும் அவன் மனதை யசைக்கவில்லை. ஆனால் மதுரைநாயகம் பிள்ளையின் மரணம் அவன் மனதை யடியோடு மாற்றிவிட்டது. அதென்ன காரணமோ எனக்கு அவ்வளவாகப் புலப்படவில்லை. மதுரைநாயகம்பிள்ளை தற்செயலாகவிறந்தானே அல்லது ஏதேனும் கெடுதி நடந்ததோ எதுவும் அவனுக்குத் தெரியாது. ஆனால் அவன் மனம் என்னமோ அடியோடு மாறிவிட்டது" என்றார்.

**கிருஷ்:**—"மதுரைநாயகம் பிள்ளை யுயிரோடிருக்கு மட்டும் அவன் சாவதாயினும் மதுரைநாயகத்தின் சங்கதிகளை வெளியிடமாட்டான்—அதனால் மதுரை நாயகத்திற்குக் கெடுதி நேரிடுமாதலால்—கள்ளக் கூட்டத்தில் இத்தகைய ஒருநெறியுண்டு. அதோடு இன்னொரு விஷயம். அதாவது, மதுரைநாயகம்பிள்ளை மடிந்த வரையில் தன்னை யொருவரும் ஆதரிக்கமாட்டார்களென்றும், தன் முயற்சியால் தான் எப்படியாயினும் போகட்டுமென்று விட்டுவிட்டார்களென்றும் அவன் மனதிற்குப் புலப்பட்டிருக்கும்" என்றான்.

**கருணாகரம்பிள்ளை:**—"ஆம், அதுவே சங்கதி. வக்கீல் கனகசபைப்பிள்ளை தன்னை வேண்டுமென்றே கைவிட்டு விட்

டான், மோசம் செய்து விட்டான் என்றே யவன் எண்ணிக்கொண்டிருக்கிறான். அது அவன் மனதை வாதிக்கிறது. நீ கனகசபையைப் பற்றிய விஷயங்களைக் கண்டு பிடித்து அவனைப் பயமுறுத்தியது சுப்பனுக்குத்தெரியாது. நானும் அதை வெளியிடாமல் சாக்கிரதையா யிருந்துவிட்டேன்" என்றார்.

அதன் பிறகு கருணாகரம்பிள்ளை யிவர்களை யுள்ளறைக்கு அழைத்துச்சென்றார். இவர்கள் காரியாலயத்திற்குள் வரும் போதே, கருணாகரம் பிள்ளை யிவர்களை முன்னறையில் வந்து சந்தித்ததால், கிருஷ்ணராவ் "ஓகோ உள்ளே யாரோ விருக்கிறார்கள்" என்று ஊகித்துக்கொண்டான். உள்ளறைக்குச் சென்றபோது அங்கு ஜட்கா சுப்பனையும் கருணாகரம் பிள்ளையின் இலிகிதர்களில் இருவர் அவனிடம் சங்கதிகளைக் கிரகிப்பதையும் கண்டார்கள்.

பெரும்பாலான குற்றவாளிகள் தங்கள் குற்றத்தை யொப்புக் கொண்டு தங்கள் கூட்டாளிகளைக் காட்டிக் கொடுக்கும்போது அளவு மீறிச் சங்கதிகளை வெளியிட்டு விடுவது சுபாவம். இந்தச் சட்கா சுப்பன் இம்மாதிரி நடக்கப் போகிறானென்று வெளியில் நன்றாகப் பிரஸ்தாபமாய்விட்டது. இச்சங்கதி ஜெகநாதனுக்குத் தெரியும். அதனால் அவன், "நட்சத்திர பத்திரிகையிலுள்ள என் நண்பர்களில் ஒருவன் என்னிடம் ஒரு சங்கதி உபாயமாய்க் கூறினான். அதாவது, 'ஜட்கா சுப்பனுக்குப் போதுமான பணம் கொடுத்துச் சங்கதிகளைக் கிரகித்துக் கொண்டு ஆதிவாரப் பத்திரிகையில் வெளியிடலாகும்' என்று பத்திரிகாசிரியர் ஆலோசிப்பதாகக் கூறினான். இதுகாறும் கள்ளக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கும் ஜட்காசுப்பனை யாதரிக்கும் கட்சிக்கும் அச்சங்கதி தெரிந்துவிட்டிருக்கு மென்று கருதுகிறேன்" என்று கூறினான்.

கிருஷ்ணராவும், ஜெகநாதனும் வருவதற்குள்ளாகவே அங்குள்ளவர்கள் ஜட்கா சுப்பனிடமிருந்து பெரும்பாலான சங்கதிகளைக் கிரகித்துக் கொண்டார்கள். அவையாவும் சாக்கிரதையாய் ஒன்று விடாமல் குறித்துக் கொள்ளப்பட்டபடியால் இவர்கள் யாவும் அறிந்து கொள்ள வசதியாக விருந்தன.

கருணாகரம்பிள்ளை இவர்கள் இருவரையும் உள்ளறைக்கு அழைத்துச் சென்றபோது ஜட்காசுப்பன் தான் பேசிக் கொண்டிருந்த இலிகிதர்களிட மிருந்து திரும்பிக் கருணாகரம்பிள்ளையை நோக்கி "இதோ பாருங்கள். அங்கு நடக்கும் ஏற்பாட்டைப் பற்றி முழுமையும் நான் கூறமுடியாது. ஒருவராலுமாகாது. அதாவது,எனக்கரவது இன்னும் யாருக்காவது நேராய் எங்களுக்கு அடுத்தபடியில் மேலிருப்போரும் கீழிருப்போருங்கூட கூறமுடியாது. ஆனால் எங்களுக்குள் ஏதேனும் அபிப்பிராயங்க ளிருக்கலாம். நாங்கள் கேள்வியால் ஏதேனுமறிந்திருக்கலாம். ஆயினும் அவை ருசுக்களாகப் பயன்படா" என்றான்.

**கருணாகரம்பிள்ளை:**—"அது எனக்குத் தெரியும். நான் அப்படி யெதிர் பார்க்கவில்லை. நீ கேள்விப்பட்டதையும் உண்டாகி யிருக்கும் வதந்திகளையும் கூறவேண்டும். என் நிபந்தனை யென்ன வெனில், நீ யுனக்குத் தெரிந்தவரையில் ஒளிக்காமல் கூறிவிட்டால் தான் உனக்கு மன்னிப்பு. இன்றேல் நமது நிபந்தனை முறிந்து விட்டமாதிரியே" என்றார்.

ஜட்காசுப்பன் அவர்கருத்தை யறிந்துகொண்டு "நான் அவ்வாறே கூறவில்லையா?" என்றான். கருணாகரம்பிள்ளை "ஆகா இதுகாறும் கூறினாய். இப்போது உனக்கு மேலாக விருந்த ஆள் யார்? யாருக்கு நீ உன் விவகாரங்களைத்

தெரிவித்துக்கொண் டிருந்தாய்? என்பதைக் கூறவேண்டும்'' என்றார்.

சுப்பன், அடடா இதைக்கூட கேட்க வேண்டுமா என்று வியப்படைந்தவன்போல் "இதற்கா சந்தேகம்? மதுரை நாயகம்பிள்ளையே'' என்றான். துரைத்தன வக்கீல் "அது சரிதான். அவனுக்கு மேல் யார்?'' என்றார். சுப்பன் "ஏன்? துர்க்கையன் என்று தங்களுக்கே தெரியுமே. ஆனால் நான் அதை ருசுப்படுத்த முடியாது. அவ்வளவே யுண்மை'' என்றான்.

கருணாகரம்பிள்ளை, கிருஷ்ணாராவையும் ஜெகநாதனையும் நோக்கி, "இவன் தன் கூட்டாளிகளைப் பற்றியும், தன் கீழ் வேலை செய்தவர்களைப் பற்றியும் முன்னமே கூறி யிருக்கிறான்,'' என்று கூறிவிட்டுச் சுப்பனை நோக்கி "இப்போது, இலக்ஷ்மணசாமிப் பிள்ளையைப்பற்றி யுனக்கென்ன தெரியும்?'' என்று வினவினார்.

ஜட்கா சுப்பன் "இலக்ஷ்மணசாமிப் பிள்ளையைப் பற்றியா தெரியுமா வென்கிறீர்கள். நான் களவாடிய அந்த ஆசாமி தானே?'' என்றான்.

இதைக் கேட்டதே மூவரும் திடுக்கிட்டு விட்டார்கள். கிருஷ்ணாராவ் "நீயா களவாடினாய்? மெய்யாகவே உனக்கு அந்த எஃகுத்தகட்டை மென்றுவிடும் இராசாயன மருந்து தெரியுமா?'' என்று மிக்க வியப்புற்றவன்போற் கேட்டான்.

கள்ளனாகிய ஜட்காசுப்பன் இவ்வாறு தன்னைக் கேட்பது, அதிலும் பிரசித்தி பெற்ற துப்பறிபவனாகிய கிருஷ்ணாராவே கேட்பது தன்கள்ளச் சாமர்த்தியத்திற்கு ஒரு சிறந்த நற்சாட்சிப் பத்திரம் என்று அவன் எண்ணிக் கொண்டான். ஆதலால் அவன் மிக்க சந்தோஷத்தோடும், உற்சாகத்தோடும்,

"ஆம். நான் அதையொரு கூட்டாளியிட மிருந்து

கற்றுக் கொண்டேன். அவன் இரும்புப் பெட்டிகள் முதலிய வற்றைத் திறப்பதைப்பற்றி மிக்க ஆராய்ச்சி செய்தவன். அவனுக்கு ஏதோ இரகசியம் தெரியுமென்று எனக்குப் புலப்பட்டது. ஒரு நாள் இரவு அவனை யழைத்துப்போய் நல்ல விருந்து செய்து அந்த இரகசியத்தைக் கிரகித்துக் கொண்டேன். அதன் பிறகு எனக்குச் சமயம் நேர்ந்த போது அதை யுபயோகித்துக் கொண்டேன்" என்முன்.

கிருஷ்ணராவ் "அப்பெண் இரத்தினபாய்—அவள் எப்படி இதில் சம்பந்தப்பட்டாள். நீ அவள் காரியாலயத் திற்குச் சென்று இலக்ஷ்மணசாமிப் பிள்ளையின் விவகாரங் களைப்பற்றி யவளிடம் விசாரித்தாயோ?" என்முன்.

அவ்வாறு கேட்டது சுப்பனுக்கு வெறுப்பை யுண் டாக்கி விட்டது. "நான் இந்த அற்ப காரியத்திற்கா ஒரு பெண்பிள்ளையின் உதவியைக் கோருவேன் என்று கருதுகிறீர்கள்? அவள் கூறுவதற்குமேல் எனக்குத் தெரியு மே. இல்லையில்லை நானே செய்தேன். நானே பூட்டை யுடைத்தேன். நானே பெட்டியை யெரித்து அதற்குள் ளிருந்த ஒரு வஸ்துவை யெடுத்துக் கொண்டேன். அதா வது மிருதுவாகிய ஒரு தோலில் நிறையக் கையால் அச் சடிக்கப்பட்ட கடிதங்கள் இருந்தன" என்முன்.

அதைக் கேட்டதே யாவரும் துள்ளி யெழுந்தார்கள். ஏனெனில் கடைசியில் கறுப்புப் புத்தகத்தின் சங்கதி வெளி யாயிற்று.

கருணாகரம்பிள்ளை, "ஆகா, சரி. அப்புறம் என்ன? அப் புத்தகத்தை யென்ன செய்தாய்?" என்ருர்.

சுப்பன், "ஏன்! கொண்டுபோய் மதுரை நாயகத்தி னிடம் கொடுத்து விட்டேன்" என்முன்.

**கருணாகரம்பிள்ளை:—** அதை யவன் என்ன செய்தான்?

சுப்பன் தலையசைத்து "நான் உங்களை யேமாற்ற முயல்

வதால் எனக்கொரு பயனுமில்லை. நான் சூதாய்க் கூறினால் நீங்கள் எப்படியும் கண்டுபிடித்து விடுவீர்கள். அவன் அதை யென்ன செய்தான் என்பது எனக்குத் தெரிந்திருந்தால் நான் அவசியம் கூறிவிடுவேன். ஆனால் எனக்குத் தெரியாது. அவன் அதை யென்னிட மிருந்து வாங்கிக் கொண்டான். அவ்வளவே எனக்குத் தெரியும். ஒரு சமயம் கொளுத்தி விட்டிருக்கலாம்—எனக்குத் தெரியாது. என் வேலையை நான் செய்து விட்டேன்.

ஜட்காசுப்பன் சுத்த அயோக்கியப் பயல் என்றாலும் இச்சந்தர்ப்பத்தில் உண்மையையே பேசுகிறான் என்று கிருஷ்ணராவ் முதலியவர்கள் உணர்ந்து வியப்படைந்தார்கள். அவன் கறுப்புப் புத்தகத்தைப் பற்றிக் கூறுவதைக் கேட்டு அவர்கள் பிரமித்து ஒருவரைப் பார்த்து ஒருவர் விழித்தார்கள். மதுரைநாயகம் பிள்ளை அதை யழித்து விட்டிருந்தால் என்ன செய்வது? அதைக் கைப்பற்றிவிட்டால் இவர்கள் அடையலாம் என்று கருதியிருந்த பயன்களெல்லாம் ஒன்றுமில்லாமற் போய்விடும். ஆனால் அவன் இறக்குமுன் அதை யழிததுவிடாமல் எங்கேனும் மறைத்து வைத்திருந்தால் ஒரு சமயம் அது அகப்படலாம் என்ற நம்பிக்கையுண்டு. பெரும்பாலும் அவன் அதை வேறுயாரிடமாவது கொடுத்து வைத்திருப்பான் என்று ஜெகநாதன் தனக்குள் சிந்தித்தான். ஜட்காசுப்பனுக் கென்னமோ அதற்கு மேல் அதைப்பற்றிய விஷயம் தெரியாது.

ஆயினும் சுப்பன் கூறிய சங்கதி மிக்க விசேஷமானதே. அவன் கூறியது தான் இவர்களுக்கு முதல் முதல் கிடைத்த முக்கியமான சமாசாரம்.

கருணாகரம் பிள்ளை சுப்பன் கூறியவற்றை யெல்லாம் உண்மையே யென்று நம்பிவிடாதவர் போலவே அவனை நோக்கி "இலக்ஷ்மணசாமிப் பிள்ளையின் காரியாலயத்தில்

வேலைசெய்துகொண்டிருந்த அப்பெண் இரத்தினபாய்க்கு என்னமோ நேர்ந்திருக்கிறது. அவள் மாயமாய்க் காணமற் போய்விட்டிருக்கிறாள். அவள் குடும்பத்தார்கள் அவளை யெங்கும் தேடியும் அவளைப்பற்றி யொருசங்கதியும் தெரிய வில்லை. அது ஒரு விஷயம் உன்மே லிருக்கிறது," என்றார்.

சுப்பன் நகைத்து "அய்யா! அதைப்பற்றிப் போலீ ஸார் என்னை யெவ்வளவோ விசாரித்தார்கள். ஒன்றும் அகப்படவில்லை. தங்களுக்கும் என்மேல் கூற ஒன்றும் தெரிந்திராது. ஏனெனில் இருந்தாலல்லவோ தெரியும். ஆனால் நான் தங்களிடம் உண்மையையே கூறுகிறேன் என்று அறி விப்பதற்காக வெளிப்படையாய்க் கூறுகிறேன். நானே அவளை யழைத்துக்கொண்டு போய் விட்டேன்" என்றான்.

கருணாகரம் பிள்ளை கோபத்தோடு "அழைத்துக் கொண்டு போய் விட்டாயா—எப்படி—எங்கே" என்றார்.

**சுப்பன்:**—மதுரைநாயகம் பிள்ளை எனக்குக் கொஞ்சம் பணம் கொடுத்தான். அது அவன் பணமல்ல வென்று மட்டும் எனக்குத் தெரியும். ஆனால் அவனிடம் யார் கொடுத்தார்களோ எனக்குத் தெரியாது. அப்பணம் இச்சங்கதி மறைந்துபோகும் வரையில் அவள் எங் கேனும் போய் மறைந்திருக்கவேண்டும் என்பதற்காக. அப்பணத்தை யெடுத்துக்கொண்டு போய் அவளிடம் பேசினேன். அவள் ஒத்துக்கொண்டாள். நல்ல பணத் தொகை," என்றான்.

அச்சங்கதியைக் கேட்டதே மூவரும் திணறி விட் டார்கள். அத்தகைய சங்கதியைச் சுப்பன் அவ்வளவு அலட் சியமாய்ச் சாதாரண சங்கதியைப்போல் கூறிவிட்டது அவர் களுக்கு மிக்க வியப்பாயிருந்தது. இதில் இன்னொரு சங்கதி யவர்களுக்கு வெளியாய் விட்டது. ஆனால் அதை ருசுப்படுத்த முடியாது. அதாவது இரத்தினபாயை

மறைந்துகொண் டிருக்கும்படி பணம் கொடுத்தது தூர்க்கை யானகவே யிருக்கவேண்டும். அந்தக் கறுப்புப் புத்தகம் அடியோடு போய்விட்டாலும் இரத்தினபாயே அதிலுள்ள சங்கதிகளை அக்கள்ளட் டெலிபோன் மூலமாய் ஏற்றுக் கொண்டவளாதலால் அவள் அதிலுள்ள பெரும் பாகத்தை அல்லது முக்கியமான விஷயங்களை யெல்லாம் கவனத்தில் வைத்துக்கொண்டிருந்து வெளியிடலாகும். இச்சந்தர்ப் பத்தில் தனக்கும் தன்குடும்ப க்ஷேமத்திற்கும் வேண்டிய பொருளை நாம் சம்பாதித்துக் கொள்ளலாம் என்று அவள் அறிந்து கொண்டாள். அவள் செய்ய வேண்டியதெல்லாம் கூடி அச்சங்கதிகளை யெல்லாம் தெரிந்து கொண்டபின் அவற்றை வெளியிடாமல் தன் வரையில் வைத்துக்கொள்ள வேண்டியதே என்பதாகும்.

கிருஷ்ணராவ் சட்டென்று சுப்பனை நோக்கி "இரத்தின பாய் இப்பொழுதெங்கிருக்கிறளென்று உனக்குத் தெரியுமா?" என்றான்.

ஜட்கா சுப்பன்:—"இல்லை. இப்போது எங்கிருக்கிறளென்பது தெரியாது. அவள் சின்ன மாளிகையில் என்னைச் சந்திக்க வேண்டுமென்று ஏற்பாடு. அவள் அவ்வாறே யங்கு என்னைச் சந்தித்தாள். அது எப்படிப்பட்ட இடமென்று அவளுக்குத் தெரியாது என்றே நினைக்கிறேன். தெரிந்திருந்தால் அவள் அங்கு வந்திருக்கமாட்டாள்." என்று கூறியபின் தடுமாற்றத்தோடு பேசாமலிருந்தான்

அவன் மனதில் என்னமோவிருக்கிறதென் றுணர்ந்த கிருஷ்ணராவ் அவனை நோக்கி "மயங்காதே; யாவற்றையும், உனக்குத் தெரிந்தயாவும் கூறு—கூறவே வேண்டும்," என்றான்.

சுப்பன் "இல்லை யில்லை. நான் ஆலோசித்துக்கொண் டிருந்தேன். நான் இரத்தினபாயைப் பூபாலன் காபி ஹோட்

டலில் தான் சந்தித்தேன். அன்றைய தினம் நான் அதே யிடத்தில் சுட்டித்தானேயும், மங்கம்மாளேயும், உபயாம்பாள் கணவனுகிய மாரப்பனேயும் கூடக் கண்டதாக நன்ருய் நினே விருக்கிறது," என்ருன்.

அதைக் கேட்ட கருணுகரம் பிள்ளை மிக்க வியப்போடு "மாரப்பனேயா?" என்ருர்.

சுப்பன், "ஆம். மாரப்பன் சின்ன மாளிகை, பூபாலன் ஹோட்டல் முதலிய முக்கிய விடங்களிலெல்லாம் முகர்ந்து பார்த்துக்கொண்டே யிருக்கிருன். என்மேல் குற்றம் சாட்டப்பட்டது முதல் நான் இதைப்பற்றி நன்ருகக் கவனித்துக் கொண்டேயிருந்தேன். அவர்கள் என்னிடம் நடந்து கொண்டது முழுமையும் உண்மையாகவேதானு வென்று வியப்படைகிறேன். ஒரு சமயம் என் மூலமாகப் பணத்தைக் கொடுத்து விட்டுப் பிறகு அப்பணத்தைத் தாங்களே கைப்பற்றிக் கொள்ளக் கருதினுர்களோ என்னமோ தெரியாது. அவள் அன்று அங்கு நடந்த சீட்டாட்டம் முதலியவற்றைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அச்சமயம் அங்கு சில போக்கிரிப்பயல்களு மிருந்தார்கள். ஓ! எனக்கு ஒன்றும் புலப்படவில்லை. என் சம்பந்தப்பட்டவரையில் எனக்குத் தெரியும். என்னிடம் அவள் பணத்தை வாங்கிக்கொண்ட பிறகு அவளேப் பற்றிய விஷயம் எனக்கு ஒன்றும் தெரியாது. எனக்குத் தெரியாததை நான் எப்படிக் கூறுவேன்; நீங்களே கூறுங்கள்" என்ருன்.

கருணுகரம் பிள்ளை புன்னகையோடு "அது உண்மையே. ஆயினும் உனக்குண்டாகியிருக்கும் சந்தேகத்தை நீ கூறலாமல்லவா?" என்று கேட்டார்.

**ஜட்கா சுப்பன்** :—"நான் என்ன சந்தேகப்படுவதென்பதே யெனக்கு புலப்படவில்லை. நான் ஒரு பெரிய எந்திரத்தின் ஒரு மிக்க சிறிய பாகம் போன்றவன். அவள்

அடியோடு காணமற் போய்விட்டாள் என்ற சங் கதியைப் பத்திரிகையில் கண்ட பிறகே, ஓகோ ஏதோ சாமார்த்தியமான வேலை நடந்திருக்க வேண்டும் என்று எனக்குப் புலப்பட்டது. எனக்கொன்றும் விளங்க வில்லை" என்றான்.

இரத்தினபாயின் இருப்பிடத்தைப்பற்றி யறியக் கருணு கரம் பிள்ளை, கிருஷ்ணராவ் முதலியவர்களுக்கு எவ்வளவோ ஆவலிருந்தாலும் இச்சமயம் இந்த அதிருப்தியான தகவ லோடு அவர்கள் திருப்தியடைய வேண்டியிருந்தது.

ஜட்கா சுப்பன் மறுபடி கருணகரம் பிள்ளையை நோக்கி, "கடைசியில் அக்கூட்டத்தில் எங்கோ ஒரு சிறு அம்சம்— தாங்கள் எட்டித்தானனைக் கேட்டால் ஏதேனும் அறிய லாகும்" என்றான்.

---

## 24-வது அத்தியாயம்

மேற்கண்டவாறு அவர்கள் பேசிக்கொண் டிருக் கையில் டெலிபோன் மணி யடித்தது. அச்சமயம் கருணகரம் பிள்ளை பேசிக்கொண்டிருந்தார். கிருஷ்ணராவ் டெலிபோனருகில் இருந்தபடியால் அவனே சென்று கேட் டான். அவன் முதல் வந்த சங்கதியைக் கேட்டதே அவன் முகத்தில் கலக்கமான குறிதோன்றியது. அவன் கருணகரம் பிள்ளையை நோக்கி "இதோ உங்களைத்தான் கூப்பிடு கிறார்கள்" என்று கூறி விட்டு, "ஏதோ! குரலை யறிந்து கொள்ளக் கூடிய கருவிகொண்டு வந்திருந்தேனே, எங்கே யது? சீக்கிரம் எடு" என்றான்.

கருணகரம் பிள்ளை, "இதோ, என் மேஜையில்" என்றார்.

கிருஷ்ணராவ் டெலிபோனருகிற் சென்று "இரண்

டொரு நிமிடம் பொறும்; கருணாகரம் பிள்ளை வருகிறார்" என்று கூறினன். அதன் பின் குரலறியும் தன் கருவியை யெடுத்துத் துரிதமாக டெலிபோனில் பிணைத்து விட்டு, இனி பேசும் என்று கருணாகரம் பிள்ளையை நோக்கிச் சமிக்கை காட்டினன். அதன்மேல் அவர் பேசத் தொடங்கி, "ஆம் இது துரைத்தன வக்கீலின் காரியாலயந்தான். என்ன? ஜட்கா சுப்பனா? நீ யவனோடு பேச முடியாது. அவன் தண்டனை யடைந்து சிறையிலிருப்பவன். என்ன? அவன் இங்கிருக்கிறானா? இங்கிருக்கிறானென்று உனக் கெப்படித் தெரியும். இல்லை. அவன் இங்கேயே யிருப்ப தாயினுங்கூட உன்னை யவனோடு பேசும்படி நான் விடமாட் டேன். அதிருக்கட்டும் நீ யார்? என்ன கூறுகிறாய்? என்னையா பயமுறுத்துகிறாய்? எங்கள் இருவரையும் ஒருகை பார்த்துக்கொள்வாயா? நீயா? உன்னால் முடியுமா? சரி, நான் என்ன பதில் கூறுகிறேன் தெரியுமா? உன்னுலா னதைப் பார்; போடா மூடா. நீ எனக்கு ஒரு வரவு செல வல்ல. சீ போ. அவன் எங்கோ எனக்குத் தெரியாது" என்று கூறியது ஜெகநாதன், கிருஷ்ணாராவ், சுப்பன் மூவர்க்கும் கேட்டது. இவர் கூறிய வார்த்தைகளால் இவரோடு பேசியவன் என்ன கூறியிருப்பான் என்று ஊகித்துக் கொள்ளக் கூடியதாக விருந்தது.

கருணாகரம் பிள்ளை பேசி முடிந்தபோது ஜட்கா சுப்பன் முகத்தில் ஒரு விதமான நகை தோன்றியது. அவன் அவரை நோக்கி, "நான் முன்னமே யிதை யெதிர்பார்த் தேன். ஆனல் இவ்வளவு சீக்கிரமாகவல்ல. அய்யா! இதற்கு மேல் இந்த நகரம் நான் இருக்கத் தகுதியான விடமல்ல. தாங்கள் எனக்கு வாக்களித்தபடி என்னைக் கள்ளத்தனமாய்த் தென் ஆபிரிகாவிற்கு அனுப்பி விட வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்" என்றான்.

**கருணகரம் பிள்ளை:**—"சுப்பா! நான் என் வாக்குத் தத்தத்தை நிறைவேற்றுவேன். அப்பயனுடைய துணிகரந்தான் எனக்கு மிக்க வியப்பாக விருக்கிறது. ஆ! கிருஷ்ணராவ் எங்கே?" என்றார்.

இவர்களுடைய டெலிபோன் சம்பாஷணை நடந்து கொண்டிருக்கையில் கிருஷ்ணராவ் எப்படியோ நழுவி விட்டான். ஆயினும் இவர்கள் தேட ஆரம்பிப்பதற்குள் அவன் திரும்பி வந்துவிட்டான்.

கிருஷ்ணராவ், "இப்போது பேசியவனுடைய குரல் ஒரு மாதிரியாயிருந்தது. அதனல் தான் நான் அதைக் குறித்துக் கொள்ள வேண்டுமென்று எண்ணினேன். நீங்கள் பேசிக்கொண்டிருக்கையில் நான் வெளியறையிலுள்ள டெலிபோனுக்குச் சென்று மூலவிடத்தைக் கூப்பிட்டு விசாரித்தேன். மேற்குப் பாகத்தில் இருக்கும் கூலிக்குப் பேசும் டெலிபோன்களில் ஒன்றிலிருந்து எவனே பேசியிருக்கிறன். அவனையாவது அந்த விடத்தையாவது அறிந்துகொள்ள மார்க்கமில்லை. ஆயினும் என்றைக்காயினும் கண்டுகொள்ளும்படி அவன் குரல் நம்மிடம் சிக்கிக்கொண்டிருக்கிறது" என்றான்.

ஜட்கா சுப்பனிடம் இருந்த விஷயங்களைக் கேட்டறிய மாலை நெடுநேரமாயிற்று. அதனல் கிருஷ்ணராவும், ஜெகநாதனும் அங்கிருந்து திரும்பும்போது நெடுநேர மாயிற்று. கருணகரம்பிள்ளை தமக்குக் கிடைத்த சமாசாரங்களைப் பற்றி மிக்க சந்தோஷ மடைந்தார். கிருஷ்ணராவ் புகைப் படங்களைப்பற்றி என்ன கண்டுபிடித்தானே அதை யறியவேண்டுமென்று அவருக்கு மிக்க ஆவலாக விருந்தது.

கிருஷ்ணராவ் இப்போ தொன்றும் கூறமாட்டானென்று ஜெகநாதனுக்கு முன்னமே தெரியும். அப்படியே கிருஷ்ணராவ் ஒன்றும் கூறவேயில்லை. இப்போது இக்குரல்

சங்கதி யொன்று கிருஷ்ணுராவின் மனதிற் புகுந்து கொண்டது. அவன் சுபாவப்படி எதையும் நிச்சயமாகவறியுமுன் அவன் கூறுகிறவனல்ல. ஆகையால் கடைசியில் கிருஷ்ணுராவ் நம்மிடம் புகைப்படங்களைப் பற்றிய உண்மையைக் கூறவில்லையே யென்ற அதிருப்தியான நிலைமையிலேயே கருணுகரம் பிள்ளையின் மனதை யிருக்கவிட்டு இருவரும் அங்கிருந்து திரும்பினுர்கள்.

கிருஷ்ணுராவின் தீர்மானத்தை மாற்ற முடியாதென்று ஜெகநாதன் அறிவான். ஆகையால் பேசாமல் அவன் கூடச் சென்ருன். கிருஷ்ணுராவ் தான் இராசாயன சாலைக்குச் செல்வதாய்க் கூறியதால் ஜெநாதன் வீட்டுக்குச் சென்ருன். கிருஷ்ணுராவ் படங்களைச் சோதிக்கவே யங்குச் சென்ருன். மறுநாட்காலை ஜெகநாதன் இராசாயன சாலைக்குச் சென்ற போது கிருஷ்ணுராவ் மிக்க உற்சாகத்தோடும் சந்தோஷத்தோடு மிருப்பதைக் கண்டான். ஆனுல் அவன் என்ன கண்டு பிடித்தான் என்பதுமட்டும் விளங்கவில்லை.

கிருஷ்ணுராவ் நிதானமாய் உடையணிந்துகொண்டு பத்திரிகைகளை வாசித்தபின் பத்துமணி வரையில் சும்மாவிருந்தான். கடைசியில் கிருஷ்ணுராவ் ஜெகநாதனை நோக்கி, "துர்க்கையன் தன் காரியாலயத்திற்கு வரட்டுமென்றே யிந்நேரம் ஆலசியம் செய்தேன். இந்நேரம் வந்திருப்பான். வா போவோம்" என்ருன்.

இதைக் கேட்ட ஜெகநாதனுக்குண்டான வியப்பு சொல்லத்தரமல்ல. ஏனெனில் பிரதான விரோதியாகிய துர்க்கையனை அவனுடைய காரியாலயத்திலேயே எதிர்க்கக் கிருஷ்ணுராவுக்குண்டான துணிகரம் அவனுக்குப் பிரமையை யுண்டாக்கிவிட்டது. தெரிந்தெடுக்கும் நாள் நெருங்கியபடியால் அப்போது துர்க்கையன் கட்சியைச் சேர்ந்தவர்கள்

ஏராளமாய் அங்கு வந்துகொண்டிருந்தார்கள். ஆயினும் கிருஷ்ணராவ் எவ்வாறே தந்திரமாய் ஒரு சீட்டனுப்பித் துர்க்கையன் தனியறையில் தங்களைச் சந்திக்க உடன்படச் செய்தான்.

இவர்களிருவரும் துர்க்கையன் இருக்கும் அறையில் சென்று அவன் எதிரில் உட்கார்ந்ததும் அவன் கிருஷ்ண ராவை மெதுவாய் உற்றுப் பார்த்தான். கிருஷ்ணராவ் அவனை நோக்கி,

"நான் வந்த விஷயத்தைச் சற்று ஆலசியமாய்க் கூறு வதற்காக மன்னிக்கவேண்டும். முதலாவதாக, கொஞ்சகால மாகப் புகைப்படம் சந்தேகமின்றி யொன்றை நிச்சய மென்று ருசுப்படுத்தக்கூடிய அத்தாட்சியாகக் கருதப் படு கிறது என்ற விஷயம் உமக்கும் தெரிந்ததே. அதாவது நியாயச்சபையில் ஒரு புகைப்படம் சந்தேகிக்கக் கூடாத அத்தாட்சியாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. மற்ற எல்லா சாட்சியங்களும் தவறி விட்டால் கடைசியில் ஒரு புகைப் படம் அதை யடியோடு மாற்றி விடுகிறது. ஆயினும் ஒரு முக்கியமான விஷயம் புகைப்படத்தையே பொறுத்ததாக விருக்கையில் அத்தகைய புகைப்படம் மிக்க நெருக்கமாய்ச் சோதிக்கப்படவேண்டும். ஏனெனில் ஒரு புகைப்படம் எப் படி உண்மையைக் காட்டப் பிடிக்கப் படுகிறதோ அப்படியே பொய்யை யுண்மைபோல் காட்டவும் பிடிக்கப்படலாம். புகைப்படம் உண்மையையே காட்டுகிறதென்று நம்பப்படு கிறபடியால் பொய்யை யுண்மையாய்க் காட்ட விரும்புவோர் அவ்வாறு படங்களைக் கற்பிதமாய்ப் பிடிக்கத் தூண்டப்படு வது இயற்கையே" என்று கூறி இரண்டொரு விநாடிகள் பேசாமலிருந்தான்.

துர்க்கையன் உன்னிப்பாய்க் கிருஷ்ணராவை நோக்கிக் கொண்டிருந்தானேயன்றி ஒன்றும்கூறவில்லை. கிருஷ்ணராவ்

அதைப் பொருட்படுத்தாமல் தன் சங்கதியைத் தொடர்ந்து, "வெவ்வேறிடங்களில் பிடிக்கப்பட்ட புகைப் படங்களைச் சேர்த்து ஒரே இடத்தில் பிடிக்கப்பட்டது போல் காட்டக் கூடிய வழியிப்போது கண்டு பிடிக்கப்பட் டிருக்கிறது. அத்தகைய படம் மூலபடத்திற்கு முற்றும் மாருய்த் தோன் றும். புகைப்படம் பிடிப்பதில் மிக்க சுலபமாக ஏமாற்றக் கூடிய திருட்டாக்தம் ஒன்று மட்டும் கூறுகிறேன். களங்க மற்ற ஆகாயத்தில் கரிய மேகங்கள் நிறைந்திருப்பது போல் காட்டலாகும். இக்காலத்தில் சித்திரம் வரைவோர் மிக்க சாமார்த்தியமாக அனேகம் விவகாரங்களைச் செய்கிருர்கள்.

புகைப்படம் பிடிப்பவர்களில் சாதாரண சாமார்த்திய முடைய ஒருவன் ஒரு அறைக்குள் ஒருவனைப் படம் பிடித்து, பிறகு அவனை யொரு வெட்ட வெளியில்—ஏன் சிலரோடு கூட விருப்பது போலவே படம் பிடித்துக் காட்டலாகும். சூதைக் கண்டுபிடிக்காத விதமாகவே அவ்வாறு செய்யலாகும்." என்ருன்.

இவையாவும் கேட்ட துர்க்கையன் தன் கலக்கத்தை யடக்கிக் கொண்டு சற்று அக்கரையோடு கிருஷ்ணுராவ் கூறியதைக் கேட்கத் தொடங்கினுன்.

கிருஷ்ணுராவ் கூறத் தொடங்கி "இன்னும் ஒரு மனி தனுடைய சிரசை யின்னெரு மனிதனுடைய தேகத்தில் வைத்துக்கூடப் படம் பிடித்துக் காட்டலாம் என்பதைப் பற்றி நான் உமக்குக் கூறவேண்டிய அவசியமில்லை. ஒரு மனிதனுடைய உருவத்திலும் தோற்றத்திலுங்கூட மாறுதல் களை யுண்டாக்கலாம். அது மட்டுமல்ல. புகைப் படத்தால் பெரிய வீதியில் அல்லது இன்னெரு விடத்தில் எப்போதும் சென்றேயிராத ஒருவனை அங்குச் சென்றதாக நிரூபிக்கலாம். இதனுல் பெரிய குற்றத்தைச் செய்த ஒரு மனிதன், குற்றம் நடந்த சமயத்தில் மிக்க தூரத்திலிருக்கும் வேருெரு விடக்

திலிருந்ததாகக் கள்ளப் புகைப்படம் பிடித்து நிரூபித்து விடலாம்.

இப்போது புகைப் படத்தைச் சந்தேகமில்லாத சாட்சியமாக யார்தான் நம்பலாகும். அதன் இரகசிய மோசங்களை யறிந்து அவற்றை வெளிப்படையாக நிரூபிக்கக் கூடிய ஆள் இல்லாத வரையிற்றான் அதை ஒரு நியாயாதிபதி சரியான ருசுவாக நம்பலாகும். சூக்குமபுத்தியுடைய நியாயாதிபதி மூலப்படத்தை அதாவது முதல் பிடிக்கப் படும் கண்ணாடியிலுள்ள எதிர்மறைப் படத்தைப் பார்த்த பிறகே எதையும் ஆலோசிப்பான். அதைப் பார்க்கும் போது எப்படியும் சூக்கும அறிவோடு சாத்திர யுக்தமாகச் சோதிப்பவனுக்கு அது சூதென்று விளங்கிவிடும்.'' என்று கூறியபின், கிருஷ்ணராவ் துர்க்கையன் முகத்தை யுற்று நோக்கி,

"இப்போது நான் நேராக உன்மேல் ஒரு குற்றமும் சாட்டவில்லை. இப்போது என்னிடம் ஒரு புகைப்படம் சிக்கியிருக்கிறது. அதில் கருணாகரம் பிள்ளை மதுரைநாயகம் பிள்ளையோடும் உபயாம்பாளோடும், யாரென்றறியாத இன்னொரு மாதோடும் ஒரு கட்டிடத்தின் தாழ்வாரத்தில் நின்று சிநேக பாவமாக இருப்பதுபோல் தெரிகிறது. அப்படம் முதலில் நீர், மதுரைநாயகம் பிள்ளை, உபயாம்பாள், இன்னொரு மாது ஆகிய நால்வர் உருவங்களும் அடங்கியதாக விருந்ததென்று நான் தடுமாற்றமின்றிக் கூறுகிறேன். அந்த இன்னொரு மாது உனக்கு அறிமுகமானவள். அப்படத்தில் உனக்குப் பதில் கருணாகரம் பிள்ளையின் உருவம் சேர்க்கப் பட்டிருக்கிறது'' என்றதே,

துர்க்கையன் வெறுப்போடு "சேர்க்கப்பட்டதா'' என்றான்.

கிருஷ்ணராவ், "ஆம், சந்தேகமில்லை. இதன் மூலபடம்

எங்கே? இல்லை. இது வசந்தகாலத்தில் பிடிக்கப்பட்டது. அதை நான் ருசுப்படுத்துவேன்" என்று படங்களை வைத்து விட்டுக் கட்டிடத்தின் நிழலைக்காட்டி, அதைப் படத்திலுள்ள நிழலோடு ஒப்பிட்டுச் சாத்திர யுக்தமாய் அப்படம் கடந்த மே மாதத்தில் பிடிக்கப்பட்டிருக்கவேண்டும்" என்று ருசுப் படுத்தினான். தூர்க்கையன் முகத்தைச் சுளித்துக்கொண்டு பேசாமலிருந்தான்.

கிருஷ்ணராவ் பேசத்தொடங்கி, "இனி இதோ மோட்டார் வண்டியில் அவர்கள் சென்றுகொண்டிருப்பது போல் பிடிக்கப்பட்ட படத்தின் படுமோசச்செயலைக் கூறுகிறேன். எப்போதும் புகைப்படக் கருவியிலுள்ள பெட்டியில் முதலில் விழும் உருவம் தலை கீழாகவே விழும். ஒரு திரையில் நிழல் படுவதுபோல் விழும். படம் பிடிப்பவன் உருவம் விழுவதற்குப் புகைப்படப் பெட்டியின் நுனியிலுள்ள குழாயின் மூடியை மேலிருந்து திறக்கிறான். ஆகையால் உருவத்தின் அடிப்பாகமே முதலில் படத்தின் தலையில் பதிகிறது. இப்படத்தில் முன்னே வண்டியின் சக்கரங்களும் கடைசியில் வண்டியிலிருப்பவர்களின் சிரங்களும் படத்தில் பதியும். படம் பிடிக்கப்படும் பொருள் சென்றுகொண்டேயிருந்தால், அதன் உருவம் கண்ணாடியில் நகர்வதால் ஒவ்வொரு பாகமும் அதன் பின்பாகம் பதிவதற்குச் சற்று முன்னடியே பதிகிறது. ஆகையால் முழு உருவமும் முன்னுக்குச் சாய்வதுபோல் தோன்றும். குழாயின் மூடியைத் தந்திரமாக நிதானமாய்த் திறந்தால் அதிக அசைவு தோன்றும். இப் படம் அப்படித்தான் பிடிக்கப்பட்டது.

மதுரைநாயகம் பிள்ளைக்குச் சொந்தமான வண்டி பெரும்பாலும் நின்றுகொண்டிருக்கையிலே பிடிக்கப் பட்டது. அதில் நீ, மதுரைநாயகம் பிள்ளை, உபயாம்பாள், உன் சிநேகியாகிய அம்மாது நால்வரும் உட்கார்ந்திருந்தீர்

கள். இவர்களில் ஒருவருக்குப் பதில் கருணாகரம் பிள்ளையை யேனும் வேறு யாரையேனும்—அதாவது அவர்கள் உருவத்தை வைப்பது சுலபமான காரியம்.

இச்சந்தர்ப்பத்தில் உருவத்தை மாற்றி யமைத்த கள்ளன் இது மிக்க சுலபமான காரியம் என்று கருதியதால் அஜாக்கிரதையா யிருந்துவிட்டான். எப்படி யெனில் அசைவை யுண்டாக்குவதற்கு கடிதத்தை வலப்பக்கமிருந்து மேல் தூக்குவதற்குப் பதிலாக இடபக்க மிருந்து தூக்கிவிட்டான். சாதாரணமாய்ச் சரிவாகவே அசைவு தோன்றும்; ஆனால் அது இயற்கைக்கு நேர்மாறான பக்க மிருக்கிறது. வேகமாக வோடும் வண்டியின் மேல்பாகம் படத்தில் நன்றாகப் பதியாது. ஏனெனில் படத்தில் அடியிலிருந்து உருவம் பதிவதால் அடிப்பாகம் தான் நன்றாய் விழும். மேல் பாகம் கடைசியில் விழுவதால் அதற்குள் வண்டி தூரம் நகர்ந்து விடுகிறது. அதனால் உச்சி பாகம் சரியாகப் பதியாது. இப்படத்தில் அடிப்பாகத்தைப் போலவே அதுவும் தெரிகிறது. ஆகையால் ஓடும் வண்டியைப் பிடிப்பது காட்டப் பட்டதேயன்றி உண்மை யல்லவென்று நன்றாக ருசுப்படுத்தலாம். நேர்ந்த தவறென்னமோ அற்பமானதே. ஆனால் அது காரியத்தை யடியோடு அழித்து விட்டது. அதாவது உன் வண்டி அதிகவேகமாகவே செல்கிறது. அந்தோ! ஆனால் பின் பக்கம் செல்கிறது" என்றான்.

யாவும் கேட்ட துர்க்கையன் "இந்த ஆபாசக் கதைகளை யெல்லாம் ஜனங்கள் மனதில் ஏற்றுக் கொள்வார்களென்று நீ நினைக்கிறாய்? எப்படியாவதிருக்கட்டும். எனக்கு இவற்றைப்பற்றி ஆகவேண்டிய தென்ன? இதில் எனக்கு எவ்வகைச் சம்பந்தமுமில்லை. நீ யேன் இவற்றைப்பற்றி

என்னிடம் கூற வரவேண்டும். அதற்குத் தக்க அதிகாரிக ளிடம் செல்" என்றான்.

கிருஷ்ணராவ் "அப்படிச் செல்லட்டுமா?" என்று கூறிக் குனிந்து தூர்க்கையன் செவியில் என்னவோ குசுகுசு வென்று கூறினன். அவன் கூறியது இன்னதென்று ஜெக நாதனுக்குக் கொஞ்சங்கூடக் கேட்கவில்லை. ஆனால் தூர்க் கையன் உடனே பேரிடி விழுந்தவன்போல் முகம்வெளுத்து நாற்காலியில் சாய்ந்து விட்டதைக் கண்டு அவன் மிக்க வியப்படைந்தான்.

உடனே இருவரும் அங்கிருந்து புறப்பட்டார்கள். கிருஷ்ணராவ் ஒரு சங்கதியும் கூறாததால் ஜெகநாதன் அவனை யிப்போது கேட்பதில் பயனில்லையென்று எண்ணிப் பேசாமலிருந்து விட்டான். இருவரும் இரசாயன சாலை போய்ச் சேர்ந்தார்கள். மறுநாள் காலை கிருஷ்ணராவ் தன் காரியங்களைச் செய்துகொண் டிருந்தான். பத்திரிகைகள் வந்தபோது கருணாகரம் பிள்ளையைப் பற்றிய படங்கள் வெளியாகி விட்டனவாவென்று பார்க்க அவன் கவலை யெடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் ஜெகநாதன் மட்டும் அக்கரையாகப் பார்க்கத்தொடங்கினன். ஒரு பத்திரிகையிலே னும் அப்படங்கள் போடப்பட்டிருக்க வில்லை.

கிருஷ்ணராவ் ஞாயிறு காலையில் சற்றுநேரம் தன் காரியங்கள் எவற்றையோ கவனித்துக்கொண் டிருந்தான். அதன் பிறகு எங்கோ போய்விட்டான். அவன் எங்குச் சென்றானென்று ஜெகநாதனுக்குப் புலப்பட வில்லை. கிருஷ்ணராவ் தான் பெரிய குற்றங்களைக் கண்டு பிடிக்கும் போது அவற்றிற்கு வேண்டிய ருசுக்களைக் கண்டுபிடிப்பதற் காக மிக்க சாமார்த்தியவான்களாகிய கள்ளர்கள் இருக்கும் இரகசியமான விடங்களுக் கெல்லாம் அப் பாதைக்கப் போது போய் உளவறிந்து வருவது ஜெகநாதனுக்குத்

தெரியும். ஆகையால் அதற்காகத்தான் அவன் இப்போதும் போயிருப்பான் என்று எண்ணிக் கொண்டான்.

மறுநாள் திங்கட்கிழமை வந்தது. அதுதான் தெரிந்தெடுக்கும் காலத்திற்கு முன்னாள். இன்னும் அப்படங்கள் எப்பத்திரிகையிலும் பிரசுரிக்கப் படவில்லை. ஆனால் கிருஷ்ணாராவ் தான் அமைத்துக்கொண் டிருக்கும் ஏதோ ஒரு புது விதமான கருவியில் வேலை செய்துகொண் டிருந்தான். தான் எங்கோ போயிருந்ததைப் பற்றி கிருஷ்ணாராவ் வேறொன்றுங் கூறாமல் "நான் என் ஆட்களுக்கு உதவி செய்யச் சென்றிருந்தேன்" என்றான்.

ஜெகநாதன்:—"உபயாம்பாளை வேவுபார்க்கவோ" என்றான்.

கிருஷ்ணாராவ்:—"இல்லை. நான் இன்னும் உபயாம்பாள் விவகாரத்தில் தலையிடவில்லை. இது வேறே ஆசாமியை பற்றியது; நகரத்தின் மற்றொரு பாகத்தில்" என்றான்.

அவன் கூறிய மாதிரியால் "சும்மா இரு, சீக்கிரத்தில் எல்லாச் சங்கதிகளையும் அறிவாய்" என்று கூறியது போலிருந்தது. அதனால் ஜெகநாதன் அதற்குமேலொன்றும் கேட்கவில்லை.

அதற்கிடையில் கிருஷ்ணாராவ் ஒரு பெரிய மேஜையின் மேல் ஒரு புதுவிதமான கருவியை யமைத்து வைக்கத் தொடங்கி வேலை செய்கிறான். அக்கருவியில் பல அசையும் கைகள் போன்ற கம்பிகளும், தட்டுகளும், ஸ்காந்தத் துண்டுகளும், கண்ணாடிக் குழல்களும் இருந்தன. அந்த எந்திரம் இரண்டு பாகமாக விருந்தது. ஒவ்வொரு பாகத்திலும் சுமார் ஐந்தங்குல அகல முள்ள கடிதச் சுருள்கள் இருந்தன. கைபோன்ற கம்பிகளில்பென்ஸில்கள் வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் பட்டுக் கயிறுகள் கட்டப்பட்டு அக்கயிறுகள் இரண்டு கம்பிகளில் பிணைக்கப்பட் டிருந்தன. அக்கம்பிகள், சாளர வழியாகச் சென்று, வெளியிலுள்ள டெலிபோன்

கம்பிகளில் சற்று நேரத்திற்கு முன்பே, டெலிபோனுட்கள் கொண்டு வந்து பிணைத்த நூதனமான இரண்டு கம்பிகளில் பிணைக்கப்பட்டிருந்தன.

ஜெகநாதனுக்கு அது இன்னதென்று விளங்கவில்லை; ஆயினும் இது கிருஷ்ணராவ் மிக்க சாமார்த்தியமாகச் செய்யும் பல காரியங்களில் ஒன்று என்றும், இது வெளியில் இருந்து வரும் சமாசாரங்களை யறியும் கருவி என்றும் உணர்ந்து கொண்டான். அவன் அதை மிக்க வியப்போடு பார்த்துக்கொண்டே யிருந்தான்.

கடைசியில் கிருஷ்ணராவின் வேலை முடிந்ததும் கருணாகரம் பிள்ளை யங்கு வந்தார்.

---

## 25—வது அத்தியாயம்.

வெளிக்குத் தோன்றுகிற வரையில் எல்லா விவகாரங்களும் ஒழுங்காக நடைபெறுவது போலவே ஜெகநாதனுக்குப் புலப்படுகின்றன. ஆனால் கருணாகரம் பிள்ளையின் முகக்குறியால் இது காறும் கிருஷ்ணராவ் தனக்காகச்செய்த காரியத்தால் சற்றும் திருப்தி யடையாதவர் போலவே காணப்பட்டார். ஏனெனில் கிருஷ்ணராவ் புகைப் படங்களைப் பற்றி என்ன கண்டு பிடித்தா னென்பதும், அவன் துர்க்கையனைக் கண்டு பேசிய விஷயமும் அவருக்கு ஒன்றுமே தெரியாது. அவருக்கும் அழகாம்பாளுக்கும் உண்டான மனஸ்தாப நிலைமை யதே நிலைமையிலிருக்கிறது.

இவ்விஷயத்தில் ஜெகநாதனுக்கும் மிக்க கலக்கமாகவே யிருந்தது. ஏனெனில் புகைப் படங்கள் பத்திரிகைகளில் வெளியாகவில்லை யென்ற ஒரு விஷயம் தவிர மற்ற விஷயங்களனைத்தும் பெருங்குழப்பமாகவே யிருந்தன. துர்க்கையனுக்குக் கிருஷ்ணராவ் என்ன கூறினன்? ஒரு சமயம் அவனைச் சாந்தப்படுத்துவதற்காக அப்படங்கள்

வெளிவராதபடிமட்டும் ஏற்பாடு செய்துவிட்டானா? ஒரு சங்கதியும் விளங்கவில்லை. கருணாகரம் பிள்ளைக்கோ அழகாம்பாளுடைய நட்பிற்கு எங்கு இடையூறு வருகிறதோவென்ற கலக்கமே முக்கியமாய்விட்டதன்றித் தெரிந்தெடுத்தலைப்பற்றி மிக்க அசட்டையே யுண்டாகிவிட்டது.

கருணாகரம்பிள்ளை வாய்விட்டு ஒன்றும் கூறுவிடினும் அவர் பார்வையால் "கிருஷ்ணராவ் சமயம் மிஞ்சிப்போகும். இதுகாறும்கூட ஒன்றும் முடிவாய்ச் செய்யவில்லையே." யென்று மிக்க கலக்கமும் அதிருப்தியும்கொண் டிருக்கிறார் என்று தெரிந்தது.

ஜெகநாதனும் கருணாகரம் பிள்ளையும் கிருஷ்ணராவின் எதிரில் உட்கார்ந்துகொண்டு அவன் எப்போது வாய் திறப்பானோவென்று காத்துக்கொண்டிருந்தார்கள். அச்சமயம் திடீலென்று இவர்கள் திடுக்கிடும் வண்ணமாக மேஜைமேலிருந்த எந்திரத்திலுள்ள பென்ஸில் கடிதத்தில் தானே எழுதத்தொடங்கியது. இருவரும் மிக்க பிரமையோடு அதைப் பார்த்தார்கள்.

"அது எப்படி வேலை செய்கிறதா?" என்றெழுதியது. கிருஷ்ணராவ் சட்டென்று பென்ஸிலின் அடிப்பாகத்தைப் பிடித்துக்கொண்டு, "எல்லாம் சரிதான். அப்புறம் எழுது" என்று கடிதத்தில் எழுதினான்.

யாவும் பார்த்துக்கொண்டிருந்த கருணாகரம் பிள்ளை தமது வியப்பை யடக்கமுடியாமல் "இதென்ன கிருஷ்ணராவ்?" என்றார்.

கிருஷ்ணராவ் "இது இரண்டொரு வருடங்களுக்கு முன் புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட எந்திரம். தூரத்திலுள்ள ஒருவன் அங்கிருந்து எழுதுவதை அப்படியே யெழுதிக் காட்டுவது. அதாவது அந்த எழுத்து எப்படியிருக்கிறதோ அப்படியே எழுதுவது. அங்கும் இதேமாதிரிக்

கருவி அமைக்கப்பட்டிருக்கிறது. பென்ஸிலில் கட்டியுள்ள கயிறு மின்சாரக் கம்பியோடு கட்டப்பட்டிருக்கிறது. அதனுல் அங்கு பென்ஸில் எப்படி யசைகிறதோ அதே யசைவு இந்தப் பென்ஸிலுக்கு உண்டாகிறது. இதில் இரண்டு தந்திக்கம்பிகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆ! பென்ஸில் மறுபடி யசைகிறது. இருங்கள் இதென்ன பார்ப்போம்" என்றுன்.

உடனே மூவரும் அதை யுற்றுநோக்கியதில் ஒரு வார்த்தையே அப்பென்ஸில் எழுதியது. அதைக்கண்ட மூவரில் கிருஷ்ணுராவ் மட்டும் வியப்படையாமல் சட்டென்று பென்ஸிலைப்பிடித்துக்கொண்டு துரிதமாய் "பொறு; கொஞ்சம் பொறு" என்று எழுதினுன். கருணுகரம் பிள்ளையும் ஜெகநாதனும் அவ்வார்த்தையைக் கண்டதும் திடுக்கிட்டுப் பிரமித்து நின்றுர்கள். ஏனெனில் அந்தப் பென்ஸில் "நான் மதுரைநாயகம்" என்று எழுதியது.

"பொறு, கொஞ்சம் பொறு" என்று எழுதிய கிருஷ்ணுராவ் துரிதமாய்த் தன் ஜேபியிலிருந்த சில கடிதங்களையெடுத்து அவற்றிலுள்ள கையெழுத்துக்களை அங்கு எழுதப்பட்ட பெயரோடு ஒப்பிட்டுப் பார்த்து "சரியானதே" என்றுன். அவன் பார்த்த கடிதங்கள் அவன் எவ்வாறே மதுரைநாயகம் பிள்ளையிடமிருந்து கைப்பற்றியவை. கையெழுத்து சரியானதேயென்று கிருஷ்ணுராவ் கூறியதே,

கருணுகரம் பிள்ளை பின்னும் வியப்படைந்து "என்ன? சரியானதா? என்ன உன் அர்த்தம்? இதென்ன இது. இறந்தவர்களோடு பேசும் மந்திரமா? ஜாலவித்தையா? எங்கும் காணுத கேட்காத அதியற்புதமா யிருக்கிறதே. இதென்ன விந்தை!" என்றுர்.

கிருஷ்ணுராவ் "அதிசயம் அதிசயந்தான். ஆனுல் இந்திரஜாலம் ஒன்றுமில்லை. சவக்கிடங்கில் நாம் பார்த்தது

மதுரைநாயகத்தின் தேகமேயல்ல. அதை நான் மிக்க கவனமாய்ச் சோதித்தது அதற்காகத்தான். அதைப் பார்த்தபோதே எனக்கு ஒருவித வியப்பாகவும் சந்தேகமாகவு மிருந்தது. ஏனெனில் இரயிலில் அகப்பட்ட தேகத்தில் இயற்கையாய் உண்டாகவேண்டிய காயங்களுக்குமேல் செயற்கையாய் உருவின் அடையாளங்களை மறைப்பதற்காக வேறு காயங்களும் அதில் காணப்பட்டன. அச்சவம் மதுரைநாயகம் பிள்ளை யிறந்துபோனான் என்று யாவரும் நம்புவதற்காகச் செய்யப்பட்ட பெருஞ்சூதே.

அன்று இரவு உமது காரியாலயத்தில் ஜட்கா சுப்பனிடம் நாம் உளவறிந்துகொண்டிருந்தபோது யாரோ ஒரு ஆள் தங்களையும் சுப்பனையும் பயமுறுத்தினானல்லவா. அவன் குரலை மறைத்துப் பேசுகிறான் என்று எனக்கு உடனே புலப்பட்டது. ஆயினும் அக்குரல் இன்ன ஆளின் குரலென்று எனக்குப் புலப்படாவிடினும், அக்குரலை நான் எங்கோ கேட்டிருப்பதாகவே எனக்குத் தோன்றியது. அக்குரலைக் குறிப்பிட்டுக்கொண்டால் பிறகு என்னிடம் உள்ள குறிப்புகளோடு ஒத்திட்டுப் பார்த்து நான் கண்டுபிடித்திருக்கும் மார்க்கத்தால் அக்குரல் யாருடையதென்று அறியலாகும் என்று புலப்பட்டது. அதனால்தான் உடனே என்னிடமிருந்த கருவியை டெலிபோனில் பிணைத்துக் குறிப்பெடுத்துக்கொண்டேன்.

பிறகு நான் இரசாயனசாலைக்கு வந்தபின் என்னிடமுள்ள குறிப்புகளை யெடுத்து அக்குரலோடு ஒத்திட்டுச் சோதனை செய்தபோது அக்குரலைப்போலவே எல்லா அம்சங்களிலும் தோன்றுவது ஒரே யொருவன் குரல்தான்—அதாவது மதுரைநாயகம் பிள்ளையின் குரல்தான் என்று புலப்பட்டது. இறந்துபோனான் என்று யாவராலும் கருதப்படுகிற மனிதன் உயிரோடிருக்கிறான் என்று தெரிந்ததே

என்மனதிலுண்டான கிளர்ச்சி இத்தகையதென்று கூற முடியாது. அன்று சவத்தைப் பார்த்தபோதே என் மனதில் ஐயமுண்டாகியது. இப்போது அது நிச்சயமாய்விட்டது. அவன் உயிரோடிருக்கிறனென்று தெரிந்து, அவனைக் கண்டுபிடிக்க முடியாமல், அவன் எங்கிருக்கிறனென்று அறியமுடியாமல் இருப்பது என் மனதிற்கு எத்தகைய வேதனை யுண்டாக்கியிருக்குமென்று கருதுகிறீர்கள். இப்போது மதுரைநாயகம் உயிரோடிருக்கிறன். ஆனல் ஒன்றும் கூறமுடியாத நிலைமையி லிருக்கிறன்" என்றன்.

கருணாகரம் பிள்ளையும், ஜெகநாதனும் இவற்றைக் கேட்டுக்கொண்டு ஒன்றும் பேசமுடியாமல் பிரமித்து நின்றார்கள்.

கிருஷ்ணராவ் மேலும் கூறத்தொடங்கி "நான் இன்னும் அவனைக் கண்டுபிடிக்கவில்லை. அவன் நகரின் மேற்பாகத்தில் கூலிக்குப்பேசும் டெலிபோன் ஒன்றை யுபயோகப்படுத்திக்கொள்கிறன். நான் அவன் நண்பர்கள் ஒவ்வொருவர் மேலும் வேவுவைத்துப் பார்த்தேன். ஒன்றும் அகப்படவில்லை. அவர்களெல்லாம் மிக்க தந்திர சாமார்த்தியத்தோடு நடந்துகொள்கிறர்கள். அவன் நகரில் எங்கோ ஒருமிக்க இரகசியமானவிடத்தில் மாறுவேடத்தோடு ஒளிந்துகொண்டிருக்கிறன். ஒளிந்திருக்க மற்றவிடங்களைப் பார்க்கிலும் இந்நகரமே மிக்க அனுகூலமானதென்று அவன் அறிவான்.

ஆனல், நான் அவன் இருப்பிடத்தை நேராகக் காணவிடினும் அவன் நண்பர்களில் சிலர் என் கையில் போதுமானவரை சிக்கிக்கொண்டிருக்கிறர்கள். அவர்களில் ஒருவன்மூலமாய் நான் அவனேடு பேச ஏற்பாடு செய்யலாகும். அந்தமார்க்கமாய் அவனுக்குச் சங்கதி யனுப்பினேன். நான் அவனைக் காப்பாற்றிவிடுவதாகவும், இப்போதவன் வெளி

யில் வரவேண்டிய அவசிய மில்லையென்றும், இக்குழப்பம் ஒழிந்தபின் அவன் எப்போது வேண்டுமோ அப்போது எங்குப்போய்விடப் பிரியமோ அங்குச் செல்லலாமென்றும், என்வரையில் அவனுக்கு எவ்வித இடையூறும் செய்வதில்லை யென்றும், என் அறையில் இம்மாதிரி கருவி யமைப்பதாக வும் அவன் விரும்புகிறவிடத்திலும் இதேமாதிரி கருவி யமைத்து இரண்டிற்கும் சம்பந்த முண்டாக்கிக்கொண்டு பேசுவதென்றும், இதன்மூலமாய் இருவரும் பேசிக்கொள்வ தென்றும், அவன் யாவும் என்னிடம் கூறிவிடவேண்டுமென் றும், பிறகு அவன் மாறுவேடத்தோடு வெளியில் வந்தா லும் நான் ஒன்றும் செய்யாமல் அவன் தான் சேகரித் திருக்கும் பொருளை யெடுத்துக்கொண்டு இஷ்டமான நாட் டிற்குச் சென்று சுகமாக வாழும்படி விட்டுவிடுவதாகவும், இதற்கு ஒப்பாவிடின் அவர்கள் கூட்டத்திற்கே 24-மணி நேரத்தில் அழிவை யுண்டாக்கிவிடுவேனென்றும் கூறி னேன். இப்போதும் அவன் இருக்குமிடம் எனக்குத் தெரி யாது. தந்திக்கம்பிகளை இந்த எந்திரத்தோடும் அவனிட முள்ள எந்திரத்தோடும் சம்பந்தப்படுத்திய வேலைக்காரனுக் குமட்டுமே அந்த இடம் தெரியும். அவன் அதை யொரு வர்க்கும் அறிவிப்பதில்லையென்று சத்தியம் செய்து கொடுத் திருக்கிறான்" என்றான்.

யாவும் கேட்ட கருணாகரம்பிள்ளையும், ஜெகநாதனும் மந்திரத்தால் தம்பிக்கப்பட்டவர்கள்போ லாகிவிட்டார்கள். "மதுரைநாயகம் உயிரோடு..." என்று மட்டும் கூறினார்கள். அவனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது, பைத்தியக்கார சாலைக்குக் கொண்டு போகப்பட்டது, அங்கிருந்தோடிவிட் டது, எங்கும் தேடியது, இரயில் ரோட்டில் ஒரு சவம் காணப்பட்டது, அது அவனுடைய சவம் என்று கூறப்பட் டது ஆகிய இவையாவும் முன் யோசனையோடு மிக்க தந்

திரமாய்ச் செய்யப்பட்ட பெருஞ்சூதே. ஓர் நாடகமே யெனலாம். கருணாகரம் பிள்ளைக்கு அப்போது தான் யாவும் விளங்கின.

ஜெகநாதனுக்கு அப்போது தான் கிருஷ்ணாராவ் துர்க்கையனை இடிவிழுந்தவன்போல் திகைக்கச்செய்ய என்ன இரகசியம் அவன் செவியில் கூறியிருப்பான் என்பது புலப்பட்டது. அதாவது "மதுரை நாயகம்பிள்ளை உயிரோடிருப்பது எனக்குத் தெரியும். பிறகு வருகிறேன். நான் கூறுகிறபடி நடந்து கொண்டால் ஆபத்து நேராமற் காப்பாற்றுவேன்" என்று கூறினன்.

இவையாவும் ஜெகநாதன் புத்திக்குப் பளிச்சென்று புலப்பட்டன. எழுதும் எந்திரம் மறுபடி எழுதத்தொடங்கியது. அது, "கிருஷ்ணாராவ் இந்தப் பத்திரத்தையும் அழித்து விடுவதாய்க் கூறிய ஏற்பாட்டின்மேல் அவர் கேட்ட தகவல்களை யளிக்கச் சம்மதிக்கிறேன். அதன் பிறகு என்னிடம் ஒன்றும் கேட்கலாகாது. இதுகாறும் பகிரங்கமாய் விட்ட விஷயங்கள் அப்படியே யிருந்து விடவேண்டும்" என்று எழுதியது.

கிருஷ்:—"இதற்கு நீங்கள் சாக்ஷியாகவிருங்கள். இது ஒரு உடன்படிக்கை" என்ருன்.

அவர்கள் இருவரும் அதில் சாக்ஷிக் கையொப்பம் வைத்தார்கள். இதில் ஏதோ பெரிய இரகசியம் அடங்கியிருக்கிறதென்று அவர்களுக்குப் புலப்பட்டது. அதன் பிறகு அந்த எந்திரம் பின் வருமாறு எழுதியது:—

"நீங்கள் கறுப்புப் புத்தகம் என்று கூறும் அப்புத்தகம், கோபாலன் கம்பெனிக்கு அடக்கத்திற்காக அனுப்பப்பட்டிருக்கிறது. நவம்பர் மீ 3உ, அடுத்த செவ்வாய்க்கிழமை கிருஷ்ணாராவ், கருணாகரம் பிள்ளை இருவர் உத்தரவுகளையும் கொண்டுவரும் ஆளிடம் அதைக் கொடுக்கவேண்டு

மென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அக்கம்பெனியிலுள்ள ஒரு உத்தியோகஸ்தன் அப்புத்தகம் தங்களிடம் வந்து சேர்ந்ததென்று உங்களுக்கு அறிவிப்பான். அதோடு நான் சம்பந்தப்பட்ட விவகாரம் முடிந்துவிட்ட மாதிரியே."

கிருஷ்ணராவ் சற்றும் ஆலசியம் செய்யாமல் உடனே டெலிபோனிடம் சென்று ஏதோ ஒரு டெலிபோன் எண்ணைக் கூப்பிட்டான். பிறகு ஒரு நிமிடம் கழித்து "ஆ! அது அவர்களிடம் வந்து விட்டது" என்று எழுதிக் காட்டினன். அந்த எந்திரம் இரண்டொரு விநாடி பேசாமலிருந்து மறுபடி எழுதத்தொடங்கியது. இப்போது அது "மிக்க வந்தனம். நல்லதிட்டம். மதுரைநாயகம்" என்று எழுதியது.

யாவும் கண்ட கருணகரம் பிள்ளையின் வியப்பிற்கு ஒரு எல்லையில்லை. அவர் மனதிலுண்டான சந்தோஷமும் ஆச்சரியமும், கிருஷ்ணராவ் செய்த காரியங்களைப்பற்றிய பிரமையும் அவர் மனதில் அடக்க முடியாதவையாகி விட்டன. அவர் மிக்க ஆத்திரத்தோடு, கிருஷ்ணராவை நோக்கி, "அப்படியாயின் அந்தக் கறுப்புப் புத்தகம் இப்போது நம்மிடம் வருமா?" என்று கேட்டார்.

கிருஷ்:—"இல்லை. இப்போதல்ல, நாளைக்கு நான் மதுரைநாயகத்திற்கு வாக்களித்ததுபோல் துர்க்கையனுக்கும் வாக்களித்து விட்டிருக்கிறேன். தெரிந்தெடுப்பது சாதாரணமான நீதியின் வழிப்படி நடக்கவேண்டியதே" என்றான்.

கருணகரம் பிள்ளை:—"அப்படியாயின், இரவு முழுமையும் எனக்கு நித்திரை பிடிக்காதென்பது நிச்சயம். நான் இந்த விவகாரம் முடிந்தபின் அதை என் யோக்கியதையைப்பற்றிய ருசுவுக்கு உபயோகப்படுத்தக் கூடுமாயினும், இரவு என் மனம் பெருங்குழப்பத்திலேயேயிருக்கும்" என்றார்.

கிருஷ்ணராவ் நகைத்துக்கொண்டே "அப்படியாயின் உமக்கு வேறொரு விஷயம்—உமது மனதிற்குச் சந்தோஷத்தை யளிக்கத் தக்கது—கூறலாகுமென்று நான் நினைக்கிறேன். அதாவது, அப்புகைப் படங்களைப்பற்றி" என்றான்.

அப்படியவன் கூறியும் கருணாகரம்பிள்ளையின் மனக் கலக்கம் ஒழியவேயில்லை. இரவு முழுமையும் அவர் இவர்கள் கூடவே யிருந்தார். ஜெகநாதன், கிருஷ்ணராவ் அப்புகைப்படங்களை மிக்க அக்கரையோடு சோதனை செய்ததையும், அவை பொய்ப்படங்கள் என்று பூரணமான ருசுவோடு கண்டு பிடித்ததையும், அதைப்பற்றிக் கிருஷ்ணராவ் துர்க்கையனிடம் பேசி அவன் தைரியம் அடியோடழியும் படிச் செய்ததையும், யாவும் கருணாகரம்பிள்ளைக்கு இரவெல்லாம் விவரமாகத் தன்னால் கூடியவரையில் அவர் மனதிற் படும்படி கூறிக்கொண்டே யிருந்தான்.

ஜெகநாதனும், கிருஷ்ணராவும் என்னமோ இரவு முழுமையும் நிம்மதியான மனதோடிருந்தார்கள். ஆனால் கருணாகரம்பிள்ளை மட்டும் மிக்க மனக்கலக்கத்தோடேயே நித்திரையின்றிப் படுக்கையில் புரண்டுகொண் டிருந்தார்.

கடைசியில் பொழுது விடிந்தது. மூவரும் கோபாலன் கம்பெனி திறக்குமட்டும் காத்திருந்தார்கள். பிறகு அங்குச் சென்று மதுரைநாயகம் பிள்ளை அனுப்பிய சங்கதி யடங்கிய கடிதத்தைக் காட்டியதும் அக்கம்பெனிக் காரியஸ்தன் கறுப்புப் புத்தகத்தைக் கிருஷ்ணராவிடம் அளித்து விட்டான்.

---

## 26—வது அத்தியாயம்

கோபாலன் கம்பெனிக் காரியஸ்தன் கறுப்புப்புஸ்தகம் அடங்கிய ஒரு சிப்பத்தையே கிருஷ்ணராவிடம் அளித்தான். கிருஷ்ணராவ் அச்சிப்பத்தைக் கையில் வாங்கியதும் அதைப் பிரித்துப்பார்த்தான். கருணாகரம் பிள்ளை யதைக்கண்டதும் மிக்க ஆத்திரத்தோடு அவன்கையிலிருந்து பிடுங்கித் திறந்துபார்த்தார். பெருந்தரித்திரம் பிடித்தவனுக்கு ஒரு புதையல் அகப்பட்டால் எவ்வளவு சந்தோஷமுண்டாகுமோ அதனினும் அதிகசந்தோஷம் அவருக்குண்டாய் விட்டது. துர்க்கையனே, தன் விரோதிகளின் தலைவனே—தன்கையில் அடியோடு சிக்கிக்கொண்ட மாதிரியாய்விட்டது.

நேயர்களே! இக்கதையின் முக்கியவிஷயம் என்ன? கருணாகரம்பிள்ளைக்கும் துர்க்கையனுக்கு முள்ள போராட்டமா? இதற்காகவா கிருஷ்ணராவ் அதில் பிரவேசித்தான்? அல்ல. காணாமற்போன இரத்னபாயைக் கண்டுபிடிக்க வேண்டுமென்றே கிருஷ்ணராவ் இதில் தலையிட்டான். ஆனால் ஆரம்பத்தி லிருந்தே இந்த இரண்டு துரைத்தனக் கட்சிகளுக்கும் உண்டான போராட்டம் அதில் சம்பந்தப் பட்டிருக்கிற தென்று—அல்லது இரத்னபாய் காணாமற் போன விஷயம் இந்த துரைத்தனச் சச்சரவோடு சம்பந்தப் பட்டிருக்கிறதென்று விளங்கியது.

கிருஷ்ணராவ் முதலியவர்கள் இதுவரையில் இதில் எவ்வளவோ சாமார்த்தியமான காரியங்களை யெல்லாம் செய்தார்கள் எனினும் இரத்னபாய் என்னவிதமானாள் என்பதைப்பற்றி யொரு சமாசாரமும் கண்டறியக் கூடவில்லை. துப்பறியும் கண்ணம்மாளும் இரத்னபாயைக் கண்டுபிடிக்க ..யன்றவள். அவள் உபயாம்பாள்மேல் வேவுபார்த்துக்

கொண்டிருந்த தன்றி, மங்கம்மாளுடைய அழகுமாளிகை யைச் சேர்ந்த சிட்டா அறையிலிருந்து தப்பித்துக்கொண்டு போக இவர்கள் உதவிசெய்த செல்வநாயகி யென்ற மாதி ருக்கிருளே, அவளை வசப்படுத்தி அவளிடமிருந்து அந்த அழகு மாளிகையைப்பற்றிய சங்கதிகளைக் கிரகிக்கும் நோக் கத்திலேயே தன் காலத்தைச் செலவழித்தாள். இதற் கிடையில் கருணுகரம் பிள்ளைக்கும் அழகாம்பாளுக்கும் உண் டான மனஸ்தாபம் இவர்கள் ஜெயத்தைக்கூட மங்கச்செய் யக்கூடியதாக விருந்தது.

அன்று காலையெல்லாம் கிருஷ்ணுராவ் தன் இரசாயன சாலையில் வேலை செய்துகொண் டிருந்தான். அவன் தன் முதற்றரமான பூதக்கண்ணுடிகளைக் கொண்டு ஏதோ சில வற்றை மிக்க அக்கரையோடும் சுறுசுறுப்போடும் சோதனை செய்துகொண் டிருந்தான். அவன் எதிரிலுள்ள மேஜை மேல் மிக்க சிறிய அளவில் பிடிக்கப்பட்ட அனேகம் புகைப் படங்கள் இருந்தன.

ஜெகநாதன் கிருஷ்ணுராவின் செய்கையை மிக்க அக் கரையோடு கவனித்தான். கிருஷ்ணுராவ் பூதக்கண்ணுடி கொண்டு சோதிக்கும் வஸ்துக்களில் முக்கியமானது இரத் தக்கரை படிந்த ஒரு சிறு குட்டை. அதுதான் அன்றிரவு இவர்கள் மங்கம்மாளின் அழகுமாளிகையில் நுழைந்த சம யம், எல்லாரும் அங்கிருந்து ஓடியபோது ஒருமாது தன் நெற்றியில் கட்டியிருந்து கீழே நழுவவிட்டுப் போய்விட்ட இரத்தக்கறைபட்ட குட்டை. கிருஷ்ணுராவ் அதிலிருந்து என்னதான் கண்டறியப் போகிருன் என்பது ஜெகநாத னுக்குச் சற்றும் விளங்கவில்லை.

ஜெகநாதன் கிருஷ்ணுராவே பேசுவானென்று எதிர் பார்த்தான். கிருஷ்ணுராவோ ஜெகநாதன் எதிரில் நின்றிருப் பதைக்கூட கவனியாத மாதிரி தன் கவனம் முழுமையும்

தன் வேலையிற் செலுத்தியிருக்கிறான். ஜெகநாதன் இரத்தக் கறைபட்ட குட்டையைப் பார்த்தபடியால் அவன் சிந்தனை அதைக் கட்டிக்கொண்டிருந்த மாதின்மேல்சென்றது. அவளைப்பற்றிச் சிந்திக்கச் சிந்திக்க அவனுடைய மனக்குழப்பம் அதிகமேயாயிற்று. அவள் முகத்தைப்பற்றி யவன் நினைக்க நினைக்க அதை முன்பு எங்கோபார்த்ததாகத் தெரிகிறது. ஆனால் எங்கென்று சற்றும் புலப்படவில்லை.

கிருஷ்ணராவின் இரசாயனசாலையில் இரத்னபாயின் புகைப்படம் இருந்தது. ஜெகநாதன் அதையெடுத்துப்பார்த்துச் சிந்தித்தான். பத்திரிகைகளில் போடப்பட்டிருக்கும் அவள் படத்தையும் பார்த்தான். அழகிய முகமும் வெளுப்பான உரோமமுமா யிருந்தாலும் அவளாக விராதென்றே யவனுக்குப் புலப்பட்டது. அவன் கண்ட அம்மாது இரத்னபாயைவிடப் பருமனாக விருந்தாள் என்று அவனுக்குப் புலப்பட்டது. அவன் எவ்வளவுநேரம், எத்தனைமுறை சிந்தித்தாலும் அம்மாதை முன்பு கண்டதாகவே தெரிகிறது. ஆனால் எங்கு எப்போதென்று தெரியவில்லை. கடைசியில் அதைச் சிந்திப்பதை விட்டுவிட்டான். கிருஷ்ணராவ் இப்போது ஒன்றையும் வெளியிடுவதாய்ப் புலப்படவில்லை. ஆதலின் நாம் வெளியில்சென்று உலவிவிட்டு வருவோம் என்று புறப்பட்டான். ஆனால் சற்றுநேரத்திற்குள் மறுபடி மனம் இழுக்கத் திரும்பி வந்துவிட்டான்.

அப்போதும் கிருஷ்ணராவ் எதிரில் சோதனைக்குழல்களும், பூதக்கண்ணாடிகளும், புகைப்படங்களும் வைத்துக்கொண்டு மிக்க கவனமாய்ச் சோதனையி லிருக்கிறான். ஜெகநாதன் உள்ளேவந்ததும் அவன் நிமிர்ந்துபார்த்து "ஜெகநாதம்! அன்று மங்கம்மாள் அழகுமாளிகையிலிருந்து ஒரு மாது ஓடிப்போய் வண்டியிலேறி மன்றந்து விட்டாளே—

அவள் விஷயத்தில் ஏதேனும்விசேடம் நீ கவனித்தாயோ?" என்று வினவினன்.

ஜெகநாதன் "நான் கவனித்தேன் என்றே கூறவேண்டும். முட்டாள்தனமாய் ஒன்றும்கூற எனக்கு இஷ்டமில்லை. அவளை நான் எங்கோ பார்த்திருப்பதாகவே தெரிகிறது; எங்கென்று சிந்தித்தால் ஒன்றும் புலப்படவில்லை. தெரிந்தவளாகவே புலப்படுகிருள். மறுபடி எனக்குத்தெரிந்த எல்லாரையும் சிந்தித்துப்பார்த்தால் அவள் அடையாளங்களுடைய ஆள் ஒருவரும் அகப்படவில்லை. இது முட்டாள் தனமான சிந்தனையே என்று கருதுகிறேன்" என்ருன்.

கிருஷ்ணராவ் "நான்கூட முதலில் அது முட்டாள் தனமான யோசனையென்றே கருதினேன். பின்னல் யோசனைசெய்தபோது அவ்வாறு நினைத்தது தவறென்பது புலப்பட்டது. ஆனல் பெரும்பாலும் முதல் மனதிற்படும் உத்தேசமே கடைசியில் நிச்சயமென்று தெரிகிறது. அவள் நெற்றியில் கட்டியிருந்த குட்டையை நழுவவிட்டுச் சென்ருளே நினைவிருக்கிறதா? இரத்தக்கறை பட்ட குட்டை. அதை நான் எடுத்துக்கொண்டேனல்லவா. அதை என்னிடமுள்ள இரத்தக் கறைகளோடு வைத்துச் சேர்த்துப் பார்த்தால் ஏதேனும் புலப்படலாகுமென்று கருதினேன்.

இப்போது நான் கூறுவதற்கு நீ என்ன சொல்வாயோ தெரியவில்லை. அழகுடைய வெள்ளை மாதுபோலவும் நாகரீகமும் சொகுசும் உடையவள் போலவும் காணப்பட்ட அம்மாது உண்மையில் நீக்ரோ ஜாதி மாது" என்ருன்.

ஜெகநாதன் மிக்க பிரமையடைந்து "நீ யன்றி வேறு யார் இதைக் கூறியிருப்பினும் நான் அவனைச் சுத்தமூடனென்றே இயம்பி விடுவேன். ஆனல் நீ கூறும்போது இருக்கட்டும்-உனக்கு எப்படி அது தெரிந்தது?" என்ருன்.

கிருஷ்ணராவ் "இரத்த சோதனையில் மிருகங்களின்

186532
186532

இரத்தங்களிலும் மனிதர் எல்லாருடைய இரத்தங்களிலும் ஒன்றுக்கொன்று வித்தியாசமுண்டென்றும், அதனால் இரத்தத்தைக்கொண்டு அது இன்ன மிருகத்தின் இரத்தம் என்றும், இன்ன மாதிரி மனிதர் இரத்தம் என்றும் கண்டுபிடிக்க வழி யிருக்கிறது. புதிதாய் ஒரு பண்டிதர் அதைக் கண்டு பிடித்தார். மனிதன் இரத்தத்தைப் போல எந்தப் பிராணி யின் இரத்தமுமில்லை. ஆனால் இது மிக்க சூக்ஷுமமான ஆராய்ச்சி" என்றதே,

ஜெகநாதன் "அதன்படி இதில் என்ன கண்டு பிடித்தாய் ?" என்றான்.

கிருஷ்ணராவ்:—"அந்த மாது கட்டிக் கொண்டிருந்த சீலையில் பட்டிருக்கும் இரத்தம் நீக்ரோ கலப்புடையது; ஆகையால் அவள் நீக்ரோ ஜாதிக் கலப்புள்ளவள்." என்ற போது அவன் மாகதம் என்ற பெண்ணைப் பற்றித்தான் கூறுகிறான் என்று ஜெகநாதனுக்குப் புலப்பட்டது.

அதனால் அவன் "அவள் மாகதமல்ல. ஒரு முறை பார்த்ததே அவள் கறுப்பு நிறங் கலந்த அப்பெண்ணல்ல வென்று தெரிந்து விடுகிறது. அவள் நீண்ட உயரமான நாசியும் கறுத்த கூந்தலும் மற்ற ஜாடைகளும் ஓடிப்போனவ ளிடமில்லை. இரகசியப் புகைப்படம் இருக்கிறதல்லவா ?" என்றான்.

கிருஷ்ணராவ், "ஆ! அதுதான். நான் அதையே நினைத்துக்கொண்டிருக்கிறேன். நாம் கள்ளப் புகைப்படம் பிடித்ததை யவர்கள் எப்படியோ கண்டுபிடித்து விட்டார்க ளென்று கருணாகரம்பிள்ளை அறிந்து கொண்டார் என்பது தெரியுமல்லவா ? அவர்கள் என்ன செய்வார்கள் ? எந்த வழியில் நம்மைச் செயிக்கலாகுமோ அந்தவழியில் வேலை செய்து விட்டார்கள். தெரிகிறதல்லவா ?

மங்கம்மாளோ வேறு என்ன பெயரோ—அவள் ஒரு

அழகுமாளிகை வைத்துக்கொண் டிருக்கிறுளல்லவா ? ஓ ! அந்த ஆசாமிகள் அசாத்தியமான ஆட்கள். அவர்கள் ஆட்களின் உருவை மாற்றுவதற்காகவே அதைவைத்துக்கொண் டிருக்கிறுர்கள். சாத்திரயுக்தமாக ஆட்களின் உருவத்தை மாற்றக்கூடிய வழிகளையெல்லாம் கண்டுபிடித்திருக்கிறுர்கள். நாம் அந்த மாகதத்தின் அடையாளங்களை யெல்லாம் அறிந்துகொண் டிருக்கிறேம் என்று அவருக்குத் தெரியும். அதற்குமேல் அவர்கள் என்னசெய்வது ! அவள் அகப்படாம லிருப்பதற்கு அவர்கள் என்னசெய்வது ? ஆகையால் அவள் உருவத்தை மாற்றவேண்டியதே.

கிருஷ்ணராவ் மிக்க ஆத்திரத்தோடு " கண்ணம்மாள் அந்த அழகுமாளிகையில் ஆட்களின் உருவத்தை மாற்றுகிறுர்கள் என்று கூறினுளே கவனமிருக்கிறதா ! அவர்கள் செவி, மூக்கு, புருவம், நெற்றி, முகவாய்க்கட்டை, கண்களையுங்கூட மாற்றிவிடுவார்கள். டாக்டர் வீரப்பன் அவர்களுக்கு உளவாயிருக்கிறுன். அவன் வைத்திய சாத்திரமறிந்தவனுதலால் அவனுல் அவர்களுக்கு மிக்க உதவியுண்டு. அதனுற்றுன் அவனும் அங்கிருந்தான். மாகதமும் தன் உருவத்தை அடியோடு மாற்றக்கூடியகாலம் வரையில் அங்கு காத்துக்கொண்டிருந்தாள். வீரப்பனே அவளுடைய உருவங்களை யடியோடு மாற்றினுன். அக்காரியம் முடியும் தனிலும் மாகதம் அங்கிருந்தாள். தன் உருவம் பூரணமாய் மாற்றப்பட்டதே யவள் அங்கிருந்து வெளிப்பட்டாள். அவளுடைய கூந்தல், புருவம் முதலியவற்றையெல்லாம் மாற்ற அங்கு வேறு ஆட்களிருக்கிறுர்கள். ஒவ்வொருவரும் தந்தம் தொழிலில் தேர்ச்சிபெற்றவர்கள்.

இப்போது யாவும் உனக்குத் தெரிகிறதா ? அவள் கொஞ்சகாலம் மங்கம்மாளுடைய அழகு மாளிகையிலிருந்

தால்தான் பூரணமான வேறு உருவத்தோடு வெளியில் தைரியமாய் வரலாகும் என்று அறிவாள்'' என்றான்.

கிருஷ்ணராவ் இவற்றையெல்லாம் படிப்படியாய்க் கூறியதைக் கேட்ட ஜெகநாதன் மிக்க வியப்படைந்தான்.

கிருஷ்ணராவ் கடைசியில் தீர்மானமாய், "ஆம். அந்த அழகிய மாதுபோல் தோன்றியவள் நீக்ரோ இரத்தக்கலப் புள்ள மரகதமே. அவர்கள் எவ்வளவு சாமர்த்தியமாய் நம்மை யேமாற்ற முயன்றாலும், சாத்திர ஆராய்ச்சியில் தப்ப முடியாது. அவள் தன் மூக்கு, காது, நெற்றி, புரு வம் யாவற்றையும் எப்படி மாற்றிக்கொண்டாலும் தப்ப முடியாது. அவள் தன் நிறத்தை மாற்றிக்கொண்டாலும் இச்சோதனையிலிருந்து தப்பமுடியாது.'' என்றான்.

அன்று பிற்பகல் நெடுநேரங் கழித்து, கண்ணம்மாளிட மிருந்து அவசரமான சமாசாரம் வந்தது. ஜெகநாதன், கிருஷ்ணராவும் கண்ணம்மாளும் சம்பாஷித்ததில் இடை யில் கேட்ட சங்கதிகளால் இது எதுவோ முக்கியமான விஷ யம் என்றுமட்டும் அறிந்துகொண்டான்.

கிருஷ்ணராவ் டெலிபோனில் பேசி முடிந்தபின் ஜெக நாதனைநோக்கி, "அப்பெண் செல்வநாயகி, அழகுமாளி கையிலிருந்த சீட்டாகிடங்கி லிருந்து தப்பித்துக்கொண்டு போய்விட்டாளே—அவள் மனமுடைந்து வழிக்கு வந்து விட்டாள். அவள் கண்ணம்மாளோடு இன்று இங்கு வரு வாள். நீ யுடனே போய்க் கருணாகரம் பிள்ளையைப் பார்க்க வேண்டும். அவர் இன்று மாலை மூன்றுமணிக்குத் தவறாமல் இங்கு இரசாயன சாலையில் வந்திருக்கவேண்டுமென்று கூறு. சீக்கிரம் செல்லவேண்டும்'' என்று அவ்வளவு சங்கதிமட் டுமே கூறினான்.

கிருஷ்ணராவ் அவ்வாறு கூறியதும், ஜெகநாதன் ஏதே னும் கேட்பதற்குக்கூட அவகாச மளிக்காமல் துரிதமாய்

எங்கோ சென்றான். அதன்பிறகு ஜெகநாதன் கிருஷ்ணு ராவ் கூறியபடி செய்யவேண்டியதேயன்றி வேறுவழியில்லை. ஆகையால் அவன் உடனே புறப்பட்டுச் சென்றான்.

ஜெகநாதன் கருணாகரம்பிள்ளைக்காக அவர் காரியாலயத்திலும் வீட்டிலும் பார்த்துவிட்டுக் கடைசியில் அவருடைய ஹோட்டலில் அவரைக்கண்டு நடந்த சங்கதிகள் யாவும் கூறினான். அவருக்குத் தமக்கும் அழகாம்பாளுக்கு முள்ள நட்பில் நேர்ந்த உடைப்பிலேயே கவனம் முழுமையு மிருக்கிறதன்றித் தெரிந்ததெடுப்பில் தமக்குச் செயமுண்டாகுமா வென்ற கவலையேயில்லை. புகைப்படங்களைப்பற்றிக் கிருஷ்ணுராவ் என்ன கண்டுபிடித் திருக்கிறான், அதனால் தனக்கும் அழகாம்பாளுக்குமுள்ள நட்பில் தற்சமயம் உண்டாகியிருக்கும் இடையூறு நீங்குமா என்ற விஷயங்கள் ஒன்றுமே அவருக்கு இன்னும் தெரியாது. எப்படியிருந்தாலும் கிருஷ்ணுராவின் விருப்பப்படி அவர் நடக்கவே வேண்டும். ஆகையால் அவன் கூறியகாலத்திற்குச் சற்று முன்னாடியே அவர் ஜெகநாதன்கூட இரசாயன சாலைக்கு வந்து சேர்ந்தார்.

கிருஷ்ணுராவ் அதற்குமுன்பே வந்திருக்கிறான். அவன் வரும் ஆட்களுக்கு ஆசனங்கள் முதலிய யாவும் ஆயத்தமாகப் போட்டுவைத்திருக்கிறான். கருணாகரம்பிள்ளையும் ஜெகநாதனும் அங்குவந்ததும் கருணாகரம்பிள்ளை நீ என்னகண்டு பிடித்தா யென்று கிருஷ்ணுராவைக் கேட்க வாய்திறந்தார். அதற்குள் கிருஷ்ணுராவ் "துர்க்கையன் சீக்கிரத்தில் இங்கு வருவான்" என்றான்.

இம்மொழிகளைக் கேட்டதே, கருணாகரம் பிள்ளைக்கும் ஜெகநாதனுக்கும் உண்டான வியப்பிற்கோர் அளவேயில்லை. இருவரும் ஒரேவாக்காய்த் துர்க்கையனு வென்று கூறிப் பிரமித்து விட்டார்கள்.

ஏனெனில் துர்க்கையனே கருணுகரம் பிள்ளேக்கு இராஜாங்கப்போரில் கொடியவிரோதி. அவன் மிக்க அகங்காரி. அவன் இதுகாறும் துரைத்தன வக்கீலாகிய கருணுகரம் பிள்ளேயை இலட்சியம் செய்து அவரிடமாவது தன் எதிர்க் கட்சியைச்சேர்ந்த எவரிடமாவது சென்றதில்லே. அத்த கைய ஆசாமி தன்னிடம் வரும்படி கிருஷ்ணுராவ் ஏதோ பிரமாதமான காரியங்களேச் செய்திருக்க வேண்டும். இதில் மிக்க மர்மமான விஷயங்கள் நமக்குத்தெரியாதவை யிருக்க வேண்டும், என்று ஜெகநாதன், கருணுகரம்பிள்ளே ஆகிய இருவர் மனதிலும்பட்டது.

ஜெகநாதனுக்குக் கிருஷ்ணுராவ் தான் ஒருவிஷயத் தைப்பற்றிக் கண்டுபிடித்த அரிய உளவுகள் முதலியமர்மங் களே யெல்லாம், அவ்விஷயம் முடிவிற்கு வருங்காலமட்டும் வெளியிடும் வழக்கமில்லே யென்று தெரியும். "அவற்றை நண்பரிடம் வெளியிட்டால் கூட அவை யவர்களே யறியா மலே பொருசமயம் எதிரிகளுக் கெட்டிவிடும். அவர்கள் எச்சரிக்கையடைய அவகாச முண்டாகிவிடும். ஆகையால் எதிரிகள் தான் கண்டுபிடித்த உளவுகளே யறிந்தாலும் அவர் கள் அவற்றை யழிக்க ஒன்றும் செய்யமுடியாத காலம்வரு மட்டும் அவற்றை யொருவரிடமுமே கூறலாகாது" என் பது கிருஷ்ணுராவின் கொள்கை.

கருணுகரம்பிள்ளே "கிருஷ்ணுராவ் ஏதோ மிக்க முக் கியமான விஷயங்களேக் கண்டுபிடித்து விட்டிருக்கிருன். துர்க்கையனே தன் சொல்லுக்கு மாறுகூருமல் நடக்கும் படியான விதமாய் அவன் குடுமியைப் பற்றிக்கொண்டிருக் கிருன்" என்று மிக்க வியப்பும் சந்தோஷமு மடைந்தார்.

கருணுகரம்பிள்ளேயும் ஜெகநாதனும் "துர்க்கையனு?" என்று கேட்டதற்குக் கிருஷ்ணுராவ், "ஆம், அவன் மட்டு மல்ல. உபயாம்பாள் கணவன் மாரப்பனேக்கூட இங்கு

வரும்படி ஏற்பாடு செய்திருக்கிறேன். அவர்கள் வராம லிருக்கத் துணியமாட்டார்கள். ஈட்டித்தானன், டாக்டர் வீரப்பன், மங்கம்மாள், இவர்கள் மூவரும் அகப்படவில்லை. ஆயினும் கண்ணம்மாள் அச் செல்வநாயகியைமட்டும் கொண்டுவருவாள். அதன்பிறகு பார்க்கலாம்" என்றான்.

---

## 27—வது அத்தியாயம்

மேற்கண்டபடி கிருஷ்ணராவ் கூறி வாய்மூடியதும் அறையின் கதவு திறக்கப்பட்டது. மறுவிநாடி உபயாம்பாள் கணவன் மாரப்பன் உள்ளே வந்தான். அவன் பிருவோடு வந்தன மளித்தான். ஆனால் அவன் ஏதேனும் பேச வாய்திறப்பதற்குள் வெளியில் சந்தடி யுண்டாகியது. மறுபடி யாரோ வருகிறார்களென்று புலப்பட்டது. மறு நிமிடம் கதவு திறக்கப்பட்டது.

இச்சமயம் துர்க்கையன் வந்தான். அவன் முழு விவ காரத்தையும் ஏதோ வெறுப்பான அலட்சியமாய்க் கருது பவன்போற் காணப்பட்டான். அதைச் சந்தோஷமாய் அவன் வேணுமென்றே வெளிக்குக் காட்டினனென்பது புலப்பட்டது. நடக்கும் விவகாரங்கள் தனக்கு விரோத மானவையென்று தெரிந்தாலும் அவன் சாந்தமாகவே யிருந்தான். தன் மனக்கிளர்ச்சிகளை யெல்லாம் சாமார்த் தியமாய் அடக்கிக் கொண்டிருந்தான். இவர்களில் கருணா கரம்பிள்ளையும், கிருஷ்ணராவும் மட்டும் குசுகுசு வென்று பேசிக்கொண் டிருந்தார்களேயன்றி மற்றபடி அறையில் நிர்ச்சந்தடியாகவே யிருந்தது.

இரண்டொரு நிமிடங்களில் உபயாம்பாளும் வந்தாள். அதன்பின், கண்ணம்மாளும் செல்வ நாயகியும் வந்தார்கள். இவர்களுக்குள் சிநேகமுண்டாகி விட்டதென்றும், கண்

ணம்மாள் சாமார்த்தியமாய் செல்வநாயகியை வசப்படுத்திக் கொண்டாள் என்றும் ஜெகநாதன் எண்ணிக் கொண்டான். அதோடு மாரப்பன் செல்வநாயகியைக் கண்டபோது முகத்தைச் சுளித்துக் கொண்டதுபோலும், அவன் அவள் அங்குவருவாள் என்று எதிர்பார்க்காதிருந்ததாகவும், அவள் வந்ததால் சின்னமாளிகையின் இரகசியங்கள் வெளிவருமென்று அவன் கலக்கமடைவதாகவும் ஜெகநாதனுக்குப் புலப்பட்டது.

செல்வநாயகி முதல் முதல் ஹோட்டலில் மேஜையருகில் உட்கார்ந்திருந்தபோது எவ்வாறிருந்தாளோ அவ்வாறேயிருந்தாள். ஆனல் நெஞ்சில் ஏதோ பீதிகொண்டவள்போல் காணப்பட்டாள். துர்க்கையன் அவளைக் கேலியாய் நோக்குவதுபோல் காணப்பட்டான். அவன் கிருஷ்ணராவ் புதிதாய் ஏதேனும் கூறின் அதற்குத் தக்க பதிலளிக்க ஆயத்தப்பட்டுக்கொண் டிருந்தான்.

மாரப்பன் கனைத்துக்கொண்டே தன் கடியாரத்தைப் பார்த்துவிட்டு "கிருஷ்ணராவ் அவர்கள் இந்த நவீன நியாய ரீதியான நடவடிக்கையைப்பற்றி இனிக் கூறுவார்கள் என்று நினைக்கிறேன். நம்மில் சிலருக்கு வேறுவேலைகள் இருக்கின்றன வென்பதை நான் அறிவேன். நீங்களே ஆரம்பம் பண்ணலாமே" என்றான்.

கிருஷ்ணராவ் உறுதியான குரலாய், "நல்லது. சின்ன மாளிகையிலும், அதனருகிலுள்ள மங்கம்மாளின் அழகு மாளிகையிலும் நடந்த விஷயங்களைப்பற்றி நான் மறுபடி கூறவேண்டுவதில்லை யென்று நினைக்கிறேன். ஆயினும் ஒரு விஷயம் நான் கூற விரும்புகிறேன். நான் இருமுறை டாக்டர் வீரப்பன் மருந்துப் பொட்டணங்கள் அளிப்பதைப் பார்த்தேன். ஒருமுறை ஈட்டித்தானனிடமும், மற்றொரு முறை அழகு மாளிகையையும் அதைச் சேர்ந்தாற் போ

லுள்ள சீட்டா கிடங்கையும் நடத்தும் நீக்ரோ கலப்புள்ள வனும் ஈட்டித்தானன் சினேகியுமாகிய மாதினிடமும் கொடுத்தான். அம்மாதே ஈட்டித்தானனுக்கும் மேலே யிருக்கும் முதலாளிக்கும் அடிக்கடி தூது செல்பவள்.

இப்போது நான்கூறும் அம்மாதை, புதிதாய்க் கண்டு பிடிக்கப்பட்ட ஒருவிதப் புகைப்படத்தால் கண்டு பிடிக்க முயன்றேம். அச்சமயம் அவள் மிக்க தந்திரமாய் அழகு மாளிகையில் தன் முகத்தையே வேறுவிதமாய் மாற்றிக் கொண்டு தப்பித்துக்கொண்டு போய்விட்டாள். அவள் தான் உண்மையில் அழகு மாளிகையை நடத்தும் மங்கம் மாள். இருக்கட்டும் இரத்னுபாயை யேன் ஒளித்துவைக்க வேண்டும்? உங்களுக்கு அது தெரியும். துரைத்தன வக்கீ லாகிய கருணுகரம் பிள்ளைக்கும் தெரியும். கருணுகரம் பிள்ளைக்காக அஞ்சவேண்டிய ஆள் ஒருவருண்டு. கறுப்புப் புத்தகத்திலுள்ள விஷயங்களைப் பயன்படாதபடி செய்து விட வேண்டுமென்று ஒரு ஆளுக்கு அக்கரையுண்டு. அப் புத்தகம் இப்போதென் கையில் இருக்கிறது. அதற்காக அப்புத்தகத்திலுள்ள விஷயங்களை நீதிச்சபையில்கூறி நிரூ பிக்கக்கூடிய அப்பெண்ணை மறைத்து விட்டால்தான் அவ் விஷயங்கள் வெளிவரா திருக்கும். இது எப்படி நடப்பது? இதற்காக சீட்டாகிடங்குப் பேய்களையும், சின்னமாளிகைக் கள்ளப்பயல்களையும் உபயோகப் படுத்தவேண்டியது சுபா வந்தானே?" என்றுன்.

உபயாம்பாள்:—"ஓ! இது அற்பத்தன்மை" என்றுள்.

உடனே செல்வநாயகி மிக்க ஆத்திரத்தோடு "அற்பத் தன்மையா. நீ அப்படிக்கூறலாம்" நீ, அதற்கு முக்கிய கருவியாயிருந்த பேயே" என்று மிக்க வெறுப்போடு கூறினள்.

இது பெண்குரல் என்று கேட்டதும் ஜெகநாதன் திடுக்

கிட்டுத் திரும்பிப் பார்த்தான். செல்வநாயகி சிவந்த கண்க ளோடு எழுந்துநின்று உபயாம்பாளைக் கோபத்தோடு பார்த் துக் கொண்டிருந்தாள்.

தூர்க்கையன் செல்வநாயகியை நோக்கி "நீ பொய் சொல்லுகிறாய்" என்றான்.

கிருஷ்ணராவ் "செல்வநாயகி, நீ கூறுவதைக் கூறு" என்றான்.

தூர்க்கையன் முரட்டுத்தனமாய் "பத்திரம்; ஜாக்கிரதை யாயிரு" என்றான்.

செல்வநாயகி உடனே தன்னைத்தாக்கிய ஆளைநோக்கி மிக்க வெறுப்போடு "ஓ! நீயே எங்களை யெல்லாம் பணத் திற்கு எதையும் செய்யும்படி செய்தவன். அடடா! தூர்க் கையப்பிள்ளை—துரைத்தன சபையில் அவயவியாகப் போக விரும்புகிறவர்-மேலே உச்சியிலிருக்கும் ஆள்—உன் அயோக் கியக் காரியஸ்தனாகிய ஈட்டித்தானனும் அவனுக்கு மேலுள்ள போலீஸாருங்கூட பணத்தைக்கொண்டு உன்னால் கைவசப்படுத்தப்பட் டிருக்கிறார்கள். டாக்டர் வீரப்பன், உபயாம்பாள் யாவரும் உன் கை யாயுதங்களே. இவர்கள் எல்லாரிலும் பாம சண்டாளன் இதோவிருக்கும் இந்த மாரப்பன்" என்றாள்.

இதைக்கேட்ட தூர்க்கையன் முகம் சிவந்து விட்டது. கிருஷ்ணராவ் முன்னமே சின்னமாளிகையில் நடக்கும் இரகசிய சங்கதிகளை வெளியிட்டிருக்கும்போது இவள் இம் மாதிரி கூறியது அவன் வாயை யடக்கிவிட்டது. அவன் ஆயுளில் இந்த ஒரு சமயந்தான் அவன் வாயடக்கிக்கொண் டிருந்தான்.

செல்வநாயகி ஒருவன் அசுத்தமான ஒரு மிருகத்தைக் கண்டு எப்படி வெறுப்போடு திரும்பி விடுவானோ அது போல் தூர்க்கையனைவிட்டுத் திரும்பி, இப்போது உபயாம்

பாளை நோக்கி நின்ருள். அதன்பிறகு உபயாம்பாளின் கணவனுகிய மாரப்பனை நோக்கி,

"ஓ! மாரப்பன் பிள்ளையே! உன்வரையில் கூறுகிறேன். நீயொரு சங்கத்தைச் சேர்ந்தவனென்றும், ஜனசமூகத்தின் தலைவனென்றும் பலர் கூறுகிருர்கள். நீ யுண்மையில் எத்தகைய சங்கத்தைச் சேர்ந்தவனென்று நான் கருதுகிறேன் தெரியுமா? இத்தகைய பேய்த்தனமும் அயோக்கியமுமான விவகாரத்தில் நல்ல பெண்களை யொருவள் பின் ஒருவளாய்ச் சேர்த்தழித்த ஆசாமி—நீ பெண்களைக் களவாடும் கூட்டத்தைச் சேர்ந்தவன்—ஆம்—நீ யதைச் சேர்ந்தவனே—சுத்த அயோக்கியன்" என்ருள்.

செல்வநாயகி, இவ்வாறு முகத்திற்கு முன் கூறியதைக் கேட்டபோதுதான் கருணுகரம் பிள்ளைக்குச் சில விவகாரங்களின் உண்மை யின்னதென்று விளங்கியது. அவர் தட்டென்றெழுந்து செல்வநாயகியை நோக்கியபடி நின்று,

"நீ சின்ன மாளிகையைப்பற்றிக் கூறிய விஷயங்கள் யாவும் உண்மைதானே?" என்றுகேட்டார்.

உபயாம்பாள் படபடப்போடு "இவள் பொய் கூறுகிருள்" என்ருள். அதற்குள் துரைக்கையன் "ஒரு விநாடி. ஆயினும் அவ்விஷயம் இரத்னுபாய் மறைந்திருப்பதில் என்ன விதமாய்ச் சம்பந்தப்பட்டிருக்கிறது" என்று ஆத்திரத்தோடு கேட்டான். செல்வநாயகி சற்றும் தடுமாற்ற மடையாமல் ஆலசியம் செய்யாமல் உடனே பதிலுரையத் தொடங்கி,

"நான் கூறும் யாவும் உண்மையே. இவ்விஷயம் இரத்னுபாய் மறைந்திருப்பதோடு எப்படிச் சம்பந்தப்பட்டிருக்கிறது என்பதை நான் கூறுகிறேன். தயவுசெய்து கேளுங்கள். மாரப்பன் என்ற அம்மனிதனே என்னை யிவ்வழியிலிழுத்து அழித்தவன். இவன் அந்த இரத்னுபாயையும் அவ்வாறே செய்திருப்பான் என்பது சத்தியம். நான்

இவன் மாயவலையிற் சிக்கி யழிந்தேன். ஆனால் அவளோ இணங்கவில்லை. அவள் யுத்தமே புரிந்தாள். இவர்களால் அவளைச் செயிக்க முடியவில்லை. அவர்கள், பணம், உடை முதலியவற்றாலும், குடிவகையாலும், மயக்க மருந்துகளாலும், பலவந்தத்தாலும் அவளை வசப்படுத்த முடியவில்லை. நான் அது விஷயமாய்ச் சின்ன மாளிகையிலும் அழகு மாளிகையிலும் செய்யப்பட்ட முயற்சிகளை யெல்லாம்— யாவும் கண்ணுற்பார்த்தேன். எல்லாம்...'' என்றதே,

மாரப்பன் ஆக்கிரத்தால் தன்னை மறந்தவனாகி, "பொய், யாவும் பொய்—'' என்றான்.

செல்வநாயகி, "இல்லை யில்லை. நான் எள்ளளவும் பொய் கூறவில்லை. கடவுளறியக் கூறுகிறேன்—யாவும் சத்தியமே. ஓ! மாரப்பனே! நீ என்னையச் சின்னமாளிகைக்குக் கொண்டு போனதுமுதல் நான் முதல் முதல் பார்த்த மனிதர்கள் இதோவிக்கருணாகரம் பிள்ளையும் இவர் விஷயங்களில் உதவியாகவிருக்கும் உத்தமியாகிய கண்ணம்மாளுமே. இப் புண்ணிய புருஷரே நீயும் உன் நண்பர்களும் என்னை யங்குக் கொண்டு வருவதற்கு முன் என்ன நிலைமையி லிருந்தேனோ அந்த நிலைமையை யடையும் வண்ணம் எனக் கொரு சந்தர்ப்பம் அளித்தவர்கள்'' என்றாள்.

துர்க்கையன் "ஓ மாதே! சற்று சாக்கிரதையாயிரு. நாட்டில் சட்டங்கள் இருக்கின்றன. அதோடு—"என்றதே.

செல்வநாயகி "உன்போன்ற யோக்கியர்களுடைய சட்டங்களை நான் துரும்புக்குச் சமமாகக் கருதுகிறேன். உன் கள்ளர் கூட்டமோ—அதைத்தான் நீ 'அதோடு—' என்று கூறவந்தாய். அதன் தலைவனாகிய ஈட்டித்தானனே இங்கிப்போது என் முன்னிருந்தால், அவன் முகத்திற் கெதிரில் அதை நான் ஒரு தூசாய்க் கருதுகிறேனென்று

கூறுவேன். நீங்கள் என்னைக் கொன்றுவிடலாகும். ஆயினும் நான் உண்மையைக் கூறியே தீர்வேன்" என்றாள்.

அதன் பிறகு செல்வநாயகி கிருஷ்ணராவ், கருணாகரம் பிள்ளை முதலியவர்களை நோக்கி, "என் விவகாரத்தைக் கூறுகிறேன் கேளுங்கள். நான் இந்த இராஜதானி நகரினருகிலுள்ள ஒரு சிறிய ஊரிலிருந்த ஏழைப்பெண். நான் நல்ல உடை, நல்ல காட்சிகள், நல்ல வண்டியில் ஏறிச்செல்லல், நாடகங்கள், வேடிக்கைகள் கேளிக்கைகள் முதலியவற்றில் பிரியம் வைத்தவள். இந்த ஆள் அதை யறிந்துகொண்டு தன்னைப்போல் என்னையுமாக்கிவிட்டான். நான் உண்மை யறிந்ததும் இவ்வளவு தூரம் நான் இந்த அக்கிரமங்களில் நுழையமாட்டேன் என்று கூறியபோது, சாரத்தைப் பிழிந்தெடுத்துக் கொண்டபின் ஒரு எலுமிச்சம்பழத்தை யெப்படி யெறிந்து விடுகிறோமோ அப்படி என்னை நிராகரித்து விட்டான். ஓ! கடவுளே!" என்று துரிதமாகப் பேசினாள்.

செல்வநாயகி அவ்வாறு துரிதமாகப் பேசினாலும் சற்றும் கலக்கமடையாது மேலும் கூறத் தொடங்கி,

"இரத்தினபாயின் கதை யுங்களுக்கு முன்னமே தெரியும். அதில் ஒருபாகம் தெரியும். இரத்தினபாய் என்னிடம் யாவும் கூறினாள். அவள் மறைந்திருப்பதற்காக அவளுக்கு எப்படிப் பணங் கொடுக்கபட்ட தென்பதைப்பற்றிக் கூறினாள். அதுமட்டுமல்ல—அவள் வாக்களித்தபடி நடந்து கொண்டாள். கடைசியில் அவள் ஆவல் கொண்டிருந்த பணம் அகப்பட்டது. நாணயமான துரைசானி போல் நடக்கவேண்டு மென்பது அவளுடைய ஆசை. அனேக செல்வவதிகள் மங்கம்மாளது அழகுமாளிகைக்குச் செல்வதை யவள் கண்டிருக்கிறாள். அவள் கடைசியாக மறைந்து போனதினம் அங்குத்தான் சென்றாள்." என்றாள்.

கிருஷ்ணாராவ் முதலியவர்கள் கடைசியில் இரத்தின பாயைப்பற்றிய சங்கதிகள் வெளிவருவதற்காக மிக்க சந் தோஷமடைந்து ஆவலோடு அவள் வார்த்தையைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவள் இரத்தினபாய் மறைந்ததினம் அழகு மாளிகைக்குத்தான் சென்றாள் என்று கூறி நிறுத்தி யதும், கிருஷ்ணாராவ் "அப்புறம்?" என்று தூண்டினான்.

செல்வநாயகி கூறத்தொடங்கி, "அதன் பிறகு இவர் கள் கூட்டத்தின் மற்றொரு கை வேலை செய்யத் தொடங் கியது. அவள் மறைந்து போவதை நிச்சயப்படுத்த முயன் றார்கள். என்னை எத்தனை விதங்களில், இதோ இம்மனி தனும் (மாரப்பன்) இவன் கள்ளக் கூட்டமும் மயக்கி யழிக்கப் பார்த்தார்களோ அதேமாதிரி அவளை மயக்கப் பார்த்தார்கள். இவன் மங்கம்மாள், சின்ன மாளிகைக் கூட்டத்தார், பரசுராமன் ஹோட்டல் கூட்டத்தார் இவர் கள் உதவியால் அவளை மயக்கப் பார்த்தான். ஆயினும் அவள் இணங்கவில்லை. அவள் தன் பிரியப்படி செல்ல முயன்றாள். அதன்மேல் மங்கம்மாள் அவளுக்கு மயக்க மருந்துகளை யளிக்கத் தொடங்கினாள். முதலில் அபினி சேர்க்கப்பட்ட ஸிகாரெட், பிறகு மயக்க மருந்துகள் பலவந்தத்தின்மேல் அவளுக்கூட்டப்பட்டன. மங்கம்மாள் பல நாட்கள் அவளை யந்தச் சீட்டாக்கிடங்கில் அடைத்து வைத்திருந்தாள். நான் தினந்தோறும் என் மன வியா கூலத்தை மறக்க அங்குச் சென்றபோதெல்லாம் அவளைப் பார்த்தேன். அங்கு அந்த நரகலோகத்தில்—அப்போதும் இரத்னபாய் இவன் விருப்பத்திற் கிணங்கவில்லை. இனி கண்ணம்மாள் தன்னிடம் கிடைத்திருக்கும் ருசுக்களைக் கொண்டு அந்நரகலோகத்தை யடியோடடைத்து விடுவாள்.

ஆம் நான் அங்கு நடக்கும் யாவும் கண்ணுற் கண் டேன். ஒரு சமயம் நான் இவனை யிழந்து விடுவேன்

என்று பொறுமைகொண்டேன் என்று கருதலாகும். அப்படியில்லை. உண்மையில் நான் இவனை வெறுக்கிறேன். ஒரு ஸ்திரீயின் இருதயத்திலுள்ள அன்பிற்கு வெறுப்பு எவ்வளவு சமீபத்திலிருக்கிறதென்று உங்களுக்குத் தெரியாது. கடைசியில் மனம் பிடிக்காமல் இரத்னுபாயைக் காப்பாற்றக் கூடிய அக்கடிதத்தை எழுதினேன். கையால் அச்சடித்த கடிதங்களைப் பற்றிக் கண்ணம்மாள் என்னிடம் கூறினார்கள். கிருஷ்ணுராவ் பண்டிதரே! தாங்கள் எவ்வாறு அக்கடிதங்கள் சின்ன மாளிகையிலிருந்து பிறந்தன வென்று கண்டுபிடித்தீர்கள் என்பதைப் பற்றியுமறிந்தேன். நானே அவற்றை யெழுதினேனென்றொப்புக்கொள்கிறேன். அவற்றை யிந்த ஆட்களுக்காக எழுதினேன். மயக்க மருந்துகளைப்பற்றி டாக்டர் வீரப்பனுக்காக எழுதினேன். முதல் முதல் துரைத்தன வக்கீலுக்கே யெழுதினேன். உண்மையில் நான் ஒரு அனுதையாகவே யிருப்பதால் அனுதையென்று கையொப்பமிட்டேன்" என்றாள்.

செல்வநாயகி ஆத்திரத்தால் நடந்த சங்கதிகளைக்கூறும்போது தன்னைப்பற்றிய உண்மைகளையும் கூறிவிட்டாள். தன் அவமானமான விஷயங்களையும் பகிரங்கமாய்க் கூறிவிட்டபடியால் அவளுக்குண்டான மனவேதனையால் துக்கத்தை யடக்க முடியாமல் தேம்பியழுதாள்.

கிருஷ்ணுராவ் அவளுக்குத் தேறுதல் கூறினன். துர்க்கையனும் உபயாம்பாளும் வாடிய முகத்தோடு யாவும் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் ஜன்மத்தில் அவர்கள் இத்தகைய நிலைமையை யனுபவித்ததில்லை. கிருஷ்ணுராவ் கண்ணம்மாள் உதவியால் இவ்வளவு உண்மைகளைக் கண்டறிந்தபோதிலும் வெளிக்கு அவன் ஜெயமடைந்ததாலுண்டாகும் சந்தோஷத்தைக் கொஞ்சமேனும் காட்டிக்கொள்ளவில்லை. ஒரு நியாயாதிபதி குற்றவாளியின்

உண்மையை ருசுக்களால் கண்டறிந்ததே குற்றவாளியைத் தண்டித்து நீதியை நிலை நிறுத்தச் சந்தர்ப்பம் வாய்ந்த தென்று திருப்தி யடையும்போது அவர் முகத்தில் எத் தகைய பிரகாசமான குறி யுண்டாகிறதோ அத்தகைய குறியே கிருஷ்ணுராவ் முகத்திலும் உண்டாகியது.

செல்வ நாயகியைத் தேற்றியபின் கடைசியில் அவளை நோக்கிக் கிருஷ்ணுராவ் "இவ்வளவு சங்கதிகளும் உனக்குத் தெரியும்?" என்முன். செல்வநாயகி "ஆம்; நான் யாவும் கண்ணுறக் கண்டேன்" என்முள்.

தூர்க்கையன் துரிதமாய் என்னமோ சிந்தித்தான். பிறகு குனிந்து உபயாம்பாளிடம் என்னவோ குசு குசு வென்று கூறினுன்.

உபயாம்பாள்:—"அப்படியாயின் இத்துப்பறிபவர்கள் அங்குச் சென்றபோது என் இரத்னுபாயைக் கண்டு பிடிக்கவில்லை? நாளைக்குத் தக்க விடத்தில் இக்கேள் விக்கு அவர்கள் விடை யளிக்கவேண்டு மல்லவா?" என்முள்.

செல்வநாயகி தைரியத்தோடு "ஏனெனில் அவளை அங்கு இன்னும் வைத்திருப்பது அபாயமென் றுணர்ந்தீர் கள். ஹோட்டலில் நடந்த பிரஸ்தாபங்களை நான் கேள்விப் பட்டேன். யாரோ புதுவிதமாய்க் கண்டுபிடிக்கப்பட்ட சாத் திரயுக்தப்படி துப்பறியும் வேலைசெய்கிறுர்களென்று வதந்தி யுண்டாயிற்று. அவர்கள் துரைத்தன வக்கீலை நிந்தித்தார் கள். அவரோ உங்களுக்குத் தெரியாத ஆட்களைக்கொண்டு வேலைசெய்கிறுர். நீங்கள் அவருடைய ஆட்கள்மேல் வேவு பார்த்துக்கொண் டிருக்கையில் கிருஷ்ணுராவும் கண்ணம்மா ளும் உங்கள் கண் முன்பாகவே வேலைசெய்துகொண் டிருந் தார்கள்.

ஆனுல் நீங்கள் பீதியடைந்து விட்டீர்கள். நீங்களும்

உங்கள் காரியஸ்தர்களும் உங்களுக்காபத்தை யுண்டாக்கக் கூடிய ருசுவுகளை யப்புறப்படுத்த முயன்றுகொண் டிருந்தீர் கள். டாக்டர் வீரப்பனும் மங்கம்மாளும் ஒரு ஆலோசனை கூறினார்கள். நீங்கள் அதை யாவலோடு ஏற்றுக்கொண்டீர் கள். அந்தக் கள்ளப்பயல் ஈட்டித்தானன், பெண்களை யேமாற்றுவதாலேயே ஜீவிப்பவன், அவன் உங்களுக்கு உதவியாயிருக்கிறான். அவனைக் கொண்டே இரத்னபாயை புறப்படுத்த யோசனை கூறினார்கள். அப்படிச் செய்வது உங்களுக்கு மிக்க சந்தோஷமாகவே யிருந்தது. ஆனால் நீங் கள் செல்லும் ஒவ்வொரு அடியிலும் அதிகமாய்ச் சேற்றில் அமிழ்ந்தும்படி செய்யப்படுவதை நீங்கள் கவனிக்கவே யில்லை. உங்கள் பயத்தில் நீங்கள் மனுஷத்தன்மை, கௌர வம், யோக்கியதை யாவும் மறந்துவிட்டீர்கள். நீங்கள் தப் பித்துக்கொள்ள என்ன ஆலோசனை கூறப்பட்டாலும் அதை யொத்துக்கொள்ள ஆயத்தமாகவிருந்தீர்கள். உங்கள் பீதியால் எந்தவழிப்போகிறோம் என்று சிந்திக்காமல் போகப் போக ஆபத்தையே யதிகமாக்கிக் கொண்டீர்கள்" என்றாள்.

---

## 28—வது அத்தியாயம்.

செல்வநாயகி கூறிய யாவும் கேட்டபின் மாரப்பன் "நீ கூறும் இத்தகைய கதைகளை யெல்லாம் யார் நம்புவார்கள்? நீ ஒப்புக்கொண்டபடி நீ எத்தகைய அந்தஸ்தி லிருக்கிறவள்? நீ கூறுகிறபடி இக்கூட்டம் செய்கிற எல்லாக் காரியங்களுக்கும் நான் பொறுப்பாளியா? நீயே யவர்களுடைய காரியஸ்தியாக விருக்கலாம். இப்போது எங் களை மிரட்டப்பார்க்கிறவர்களுக்கு உதவியாயிருக்கிறாய் மே லும். நாங்கள் இதற்கெல்லாம் அடங்கி விடுகிறவர்களல் என்று நன்றாக வறிந்துகொள். என்னாலானவரை யொரு

பார்த்தே விடுவேன். உங்களால் அகௌரவமடைய இடந்தா மாட்டேன்." என்ருன்.

செல்வநாயகி நகைத்துக்கொண்டே, "ஓகோ! அகௌரவம் இனி யடைய மாட்டாயோ? நீ இக்குற்றங்களை யெல்லாம் உனக்காக வேலை செய்தவர்கள்மேல் போடக்கருதுகிறவன். உன்கெட்ட நடக்கைகளையும் அயோக்கியச்செயல்களையும் கொண்டே யவர்கள் உன்னை வசப்படுத்திக் கொண்டார்கள். நீயோ ஏமாந்துபோய் அவர்களுக்கு இணங்கிவிட்டவனல்ல. நாம் சட்டத்திற்கு அகப்படாமல் சாமார்த்தியமாய்த் தப்பித்துக் கொள்ளலாம் என்ற தைரியத்தால் அப்படிச் செய்தாய்.

அந்த இரத்னபாய் உன்மேல் குற்றம் சாட்டக்கூடாத நிலைமையி லிருக்கிறவரையில் அவள் எங்கிருந்தாலென்ன, எக்கதியானுலென்ன வென்றே நீ கருதினுய். நீ யவளை அக்கூட்டத்தாரிடம்—ஈட்டித் தானனிடமும், மாகதத்தினிடமும், டாக்டர் வீரப்பனிடமும்—ஒப்பித்துவிட்டாய். அவள் எக்கதியானுள், நீ எவ்வளவு, எத்தகைய காரியத்திற்கு ஈடு சொல்லவேண்டு மென்று அறிய விரும்புகிருயா?" என்று ஆக்ரோஷத்தோடு கேட்டாள்.

எதிரிகளில் ஒருவரும் வாய்திறக்கவில்லை. செல்வநாயகி மேலும் கூறத்தொடங்கி, "உன் சுயநல எண்ணத்தைத் தவிர அவர்கள் அவளைப்பற்றி வேறு எண்ணம் கொண்டிருந்தார்கள். இந்த விஷயத்தில் அவர்கள் பணம்சம்பாதிக்கப் பார்த்தார்கள். அவர்கள் செய்யும் பயங்கரமான அநீத வர்த்தகத்தில் இரத்னபாய் மிக்க இலாபம் தரத்தக்க நேர்த்தியான சரக்கென்று கருதினுர்கள். அவள் மட்டும் நம்மில் மற்றையரைப்போல் இவர்களது அயோக்கிய நோக்கத்திற்கு இணங்கிவிட்டிருந்தால் இப்போது எங்குவேண்டுமானும் போகவும்வாவும் சுயாதீன மடைந்திருப்பாள். ஆனுல்

அது வெளிக்கு மட்டுமே. உண்மையில் பெரிய இரும்புவிலங் கிடப்பட்டவள்போல், என்றும் அவர்களுடைய பயங்கா மான வலேயில், எப்போதும் தப்பமுடியாத வண்ணமாய்ச் சிக்கிக்கொண்டிருப்பாள். ஆயினும் அவள் இணங்கவில்லே. அவர்கள் அவள் இருதயம் உடைந்து போகும்படி செய்து விட்டே யிருப்பார்கள். ஒருசமயம் உனக்கு மனச்சாட்சி என்ற ஒன்றிருந்திருந்தால், அவர்கள் தானே அவளே யிப் போதெங்கோ வொளித்து வைத்துக்கொண்டிருக்கிருர்கள், நாமல்லவே என்று உன்மனச்சாட்சிக்கு நீ சமாதானம் கூற முயன்றிருக்கலாகும்—ஆனால் நீ அவ்வாறு தப்பமுடியாது. நீயே மற்ற எங்களேயெல்லாம் இக்கதியாக்கியதுபோல அவ ளேயும் ஆக்கியவன்" என்ருள்.

துர்க்கையன் யாவும் கேட்டதும் அவன் மனக்கலக்க மும் வேதனேயும் சொல்லமுடியாது. அவனுல் எதையும் மறுத்துக்கூற முடியவில்லே. செல்வநாயகி இம்மாதிரி விரோ தியாய்த் திரும்பிவிடுவாளென்பதே அவன் எதிர்பாராத காரி யம். அதிலும் அவள் சற்றும் எதையும் மறைக்காமல் தன் அவமானத்தைக்கூடச் சட்டைசெய்யாமல் யாவற்றையும் பூரணமாய் வெளியிட்டு விடுவாளென்று அவனேனும் அவன் கட்சியைச்சேர்ந்த எவரேனும் கருதியவர்களல்ல. அதனுல் அவன் மாரப்பனுக்கு ஒருவழியிலும் உடந்தை யாய்ப்பேச அவனுல் முடியவில்லே. கடைசியில்,

"அவள் எப்படி வெறி பிடித்துளறினுலும் உளறிக் கொண்டு போகட்டும்" என்ருன்.

மாரப்பன்:—"ஆம். ஆம், வெறியுளறலே" என்ருன்.

ஆனல், அவன் முகத்திலுண்டான விகாரம் மனதில் அப்படிக் கருதவில்லே யென்று நன்ருகத் தெரிவித்தது.

செல்வநாயகி "ஆ பார்த்தாயா? உனக்குள் உ சொந்த ஆலோசனேயால் உண்டான ஒரு அபிப்பிராயம்

இல்லை. அன்னியர் கூறும் அபிப்பிராயத்திற்கு ஆமாம் என்று தாளந்தட்டும் நிலைமையில் நீ யிப்போதிருக்கிறாய். ஏனெனில் நீ அக்கிரமமான காரியங்களை யெல்லாம் செய்து விட்டதால், உன்னிலும் நல்ல அறிவாளிகளாகிய நீதிமான் கள் எப்படியும் உன்னைப் பிடித்து விடுவார்களென்ற பீதி யுனக்குள் ளுண்டாகிவிட்டது. அது உண்டான பின் உன் புத்தியும் மனதும் தம் இயற்கைப் பலத்தை யிழந்தன. ஒருவருக்கு நாம் நீதியான வழியில் நடக்கிறோம் என்ற நம்பிக்கையே யாவற்றினும் பெரிய பலம்—அவர்கள் எதற் கும் அஞ்சார்கள். மரணத்திற்குமஞ்சார்கள். அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டாலும் அவர்கள் அதை யலட்சியமாய்க் கருதுவார்களே யன்றி இலட்சியம் செய் யார்கள். ஓ! அறிவிலியே! இவ்வாறு எத்தனையோ பேர் தங்கள் பிராணனை நீதிக்காகவும், பொது நலத்திற்காகவும் இழந்துவிட் டிருக்கிறார்கள். நீ யுன் துர்ச்செய்கைகளுக் காகப் பயந்துகொண்டு நடக்கத் தொடங்கியதால் அவர்கள் உன்னைத் தங்கள் கையிற் போட்டுக்கொண்டார்கள். நீயே யுன் செய்கைகளால் அவ்வலையிற் சிக்கிக் கொண்டாய். இதன் முடிவு என்னவென்று தெரியும்போதே யுனக்கு யாவும் விளங்கலாகும்" என்று கூறினாள்.

துர்க்கையன் "ஓகோ! இது மிக்க நேர்த்தி. மிக்க வேடிக்கை. மிக்க புத்தி சாதுர்யமாக முன் யோசனையோடு கட்டப்பட்ட கதை. இங்கு இது மிக்க நேர்த்தியாகவே தெரி கிறது. இதை யொரு நீதிச் சபையில் நீ கூறும் காலம் வரு மட்டும் சற்று பொறு. நீதிச்சபையில் முதல் விஷயம் என்ன வென்று தெரியுமா? நீ பரிசுத்தமான உள்ளத்தோடு அங் ...ச் செல்லப்போகிறாயோ? உனக்கும், இந்த விஷயத்தில் ...காரணத்தாலும் தலையிடுகிறவர்களுக்கும் தக்க தண்டனை ...யவேண்டிய காலம் ஒன்று இருக்கிறது" என்றான்.

அச்சமயம் செல்வநாயகி அக்கினிச் சுவாலை வீசும் கண்களோடு துர்க்கையனை நோக்கிக்கொண் டிருந்தாள். பின்னர் அவள் மிக்க வெறுப்போடும் கோபத்தோடும் துர்க்கையனை நோக்கி, 'நீ—நீ—நமது சூதுவாது அயோக்கியங்களை யெவருமே கண்டு பிடிக்க முடியாதென்று கருதும் மூடக்கட்சியைச்சேர்ந்தவன். உன்னிடமுள்ள, உனக்குத் தெரிந்த ஆசாமிகள் பணத்திற்காகக் கைமாறும் குணமுடையவர்கள் என்று உனக்குத் தெரியும். நீ மூடபுத்தியால் யாவரையும் அப்படியே யெண்ணிக்கொண் டிருக்கிறாய். கண்ணம்மாள், துரைத்தன வக்கீலாகிய கருணாகரம்பிள்ளை, இவர்களைப்போன்றவர்கள் அப்படிப் பணத்திற்கு விலைக்கு வாங்கக் கூடியவர்களல்ல என்று அறிந்துகொள்ளும் புத்தியுனக்கில்லை. கீழ் நிலையிலுள்ள இரகசியக் கூட்டத்தைச் சேர்ந்த ஆட்கள் சமயம் நேர்ந்தால் எப்படி உன்மேல் ஏறிக்கொண்டு உன்னை யமிழ்த்தி விடுவார்களென்பது உனக்குத் தெரியாது. உனக்கிருக்கும் பண ஆசையால் எங்களை அழியத்தக்க அகௌரவமான சேற்றில் ஆழத்தில் அமிழ்த்தி விட்டாய். இனி நீ வேண்டுமென்றாலும் எங்களை மேலுக் கிழுக்கமுடியாது. ஆனால் நாங்கள் கீழேயே யழுந்திவிடுவதாயின் நாங்கள் உங்களையும் கூடவே இழுத்துக்கொண்டு போய்விடுவோம் என்பதை மட்டும் உறுதியாய் நம்பு. நீயும், மாரப்பனைப்போன்ற உன் அயோக்கி[illegible] எங்களுக் காதாரமான யாவற்றையும் அ[illegible]ர்கள். நாங்கள்——" என்று கூறுவதற்கு[illegible]

துர்க்கையன் தன் தலையணை[illegible] மாட்டிக்கொண்டே "மாரப்பா வா! [illegible] காலப் போக்களித்ததற்காக பண்டி[illegible] நாம் உண்மையாகவே நன்றி செலுத்[illegible] கிறோம். அவர் மறுபடி இம்மாதிரி[illegible]

நடத்தும்போது, முதல் நாடகத்திற்கு வந்த நம்மை மறக்க மாட்டாரென்று கருதுகிறேன்" என்று கூறிவிட்டு எழுந்து அறையின் கதவை நோக்கி நடந்தான்.

ஜெகநாதன் "அடடா! இதென்ன கடைசியில் விஷயம் இப்படி முடிந்ததே. இது மலையைத்தோண்டி எலியைப் பிடித்த மாதிரியாய்க்கூட வில்லையே. எலியும் தப்பித்துக் கொண்டமாதிரி யல்லவோ இருக்கிறது. ஆனால் கிருஷ்ணராவ் இன்னும் ஏதேனும் ஆயுதம் வைத்துக் கொண்டிருப்பான். ஆயினும் இப்போது பேசாம லிருந்துவிட்டால் பிறகு என்ன பயன்? எதிரிகளை யெச்சரிக்கை செய்தமாதிரி யல்லவோ ஆயிற்று. சே கிருஷ்ணராவ் ஏதேனும் செய்வான்" என்று இவ்வாறு தனக்குள் ஆத்திரத்தோடு சிந்தித்தான்.

ஆனால் கிருஷ்ணராவோ பேசாமலே உட்கார்ந்தபடியிருக்கிறன். துர்க்கையன் கதவை நெருங்கியதும் திரும்பிக் கிருஷ்ணராவை நோக்கி "கிருஷ்ணராவ்! நீர் உமது விஷயங்களைப் பகிரங்கமாய்க் கூறியதற்காக மிக்க வந்தனம். இதில் நான் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டு மென்பதைத் தெரிந்துகொண்டேன்" என்று கேலியாய் மிக்க வந்தனம் என்று கூறிவிட்டு நடந்தான்.

அப்போதும் கிருஷ்ணராவ் பேசாம லிருப்பதைக்கண்ட ஜெகநாதன் [illegible] க்க வேதனைப்பட்டது. கருணாகரம் பிள்ளை [illegible] ால் விழித்தார்.

[illegible] தலியவர்கள் கதவருகிற் சென்று [illegible] ற்றிக் கதவைத்திறக்க முயன்றார்கள். [illegible] வில்லை. ஏன்? கிருஷ்ணராவ் வாய் [illegible] திரிலிருக்கும் மேஜையின் அடிப்பக்கம் [illegible] ஒரு பொத்தானை யழுத்தினன். அது [illegible] ரு கம்பியின் முனையோடு பிணைக்கப்பட்

டிருக்கிறது. அவன் அதை யழுத்தியதே கதவுகளெல்லாம் பூட்டப்பட்டன. சாளரங்களும் அவ்வாறே.

துர்க்கையன் உடனே இதில் ஏதோ கிருஷ்ணராவின் சாமார்த்தியமும் தந்திரமுமான வேலை யிருக்கிறது. நாம் இப்போது சிறையில் சிக்கியமாதிரியே யென்றுணர்ந்தான். உடனே அவனுடைய முரட்டுத் தைரியமும், மாரப்பன் தைரியம் துணிகரம் யாவும் எங்கோ பறந்து போயின.

துர்க்கையன் மிக்க கோபத்தோடு பேசத் தொடங்கினும் அவன் குரலில் நடுக்க முண்டாய் விட்டது. அவன் திரும்பி வந்து "சரிதான்" என்று கூறிக்கொண்டே பேசாமல் நின்றான்.

கிருஷ்ணராவ் செல்வ நாயகியை நோக்கி "இரத்னபாய் எங்கே? அவளை யெங்கே கொண்டுபோய் வைத்திருக்கிறார்கள்?" என்று கேட்டான்.

செல்வநாயகி சற்று நிதானித்தாள். அவள் மனதில் ஏதோ பீதி, பெரும்பீதி யுண்டா யிருந்ததுபோல் தோன்றியது. கிருஷ்ணராவ் அவளுக்குத் தைரிய மொழிகளைக் கூறினன். "நீ ஒருவர்க்கும் பயப்படாதே. எப்படிப்பட்ட கொலை பாதகனாகவிருப்பினும் சரி. உனக்கு எள்ளளவு ஆபத்து நேரின் நான் என் உயிரைக் கொடுப்பேன். இத் துஷ்டர்களை நான் விடப்போகிறதில்லை. ...ோடு இவர்களை யழுத்திவிட்டே தீருவேன்......" என்ற...

கடைசியில் செல்வநாயகி நமது பி...
போகட்டுமென்று துணிந்து விட்டவ...
ஈட்டித்தானன் நான் கூறிவிட்டதை...
என்னைக் கொன்று விடுவான்" என்று...

செல்வநாயகி மனதில் இன்னும் ...
பதைபறந்த கிருஷ்ணராவ் அவளருகி...

வாய் "அவன் முடிவே நெருங்கிவிட்டது" என்று கூறி விட்டு யாவர்க்கும் கேட்கும்படி,

"அக்கள்ளன் அவளை யெங்கே கொண்டுபோய் வைத்திருக்கிறான்?" என்று கேட்டான். செல்வநாயகி பயம் நீங்கி "நகரத்தின் மேற்கு பாகத்தில் வேலந்தோப்பி லிருக்கிறதே கல்மண்டபம் என்ற ஹோட்டல் அதில் கொண்டு போய் வைத்திருக்கிறான்" என்றாள்.

கல்மண்டபம் என்ற ஹோட்டலும் கள்ளர் துஷ்டர்கள் முதலியவர்கள் மறைந்திருப்பதற்குத் தக்க வசதியுடையதே. இரத்னபாயை யங்குத்தான் வைத்திருக்கிறார்கள் என்றதே தனக்கு அகப்படாமலிருக்கும் ஈட்டித்தானனும், டாக்டர் வீரப்பனும்கூட அங்குத்தான் மறைந்திருப்பார்களென்று கிருஷ்ணராவ் மனதிற்பட்டது. கிருஷ்ணராவ் சமயோசித புத்தி பூரணமாக வுடையவன். இப்போது எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பது அவன் மனதில் உடனே தோன்றிவிட்டது.

கிருஷ்ணராவ் உடனே கருணாகரம் பிள்ளையின் செவியில் குசுகுசுவென்று என்னமோ கூறினான். அவர் உடனே எழுந்துசென்று வெளியறையிலுள்ள சாளரத்தில் நின்று வீதியில் நின்றிருக்கும் தமது ஆளிடம் இரண்டு வண்டிகள் கொண்டுவரும்படி சமிக்கைசெய்தார். அவர் திரும்பி உள்ளே
வந்து சி ... ின் பக்கத்திலுட்கார்ந்து "கிருஷ்ணராவ்!
ஜெச ... கண்ணம்மாளையும் செல்வ நாயகியை
... ண்டு ஒருவண்டியில் ஏறிச்செல்லுங்கள்,
... மாரப்பனும் வேறொரு வண்டியில்
... கூறின
... யைக் கேட்காது கருணாகரம்பிள்ளை யவ்
... த துர்க்கையனுக்கு அவர் அதிகார
... கத் துணிந்துவிட்டார் என்று இதிலுண்

80532

டாயிற்று. ஆயினும் அவனும் மாரப்பனும் முகம் சிவந்து எழுந்து நின்றார்கள். அச்சமயம் கருணைகரம்பிள்ளை தமது ஜேபியிலிருந்த போலீஸ் ஊது குழலை வெளியிலெடுத்துக் கையில் ஆட்டிக்கொண் டிருப்பதைக் கண்டதும் இருவரும் இடிப்புடைந்தவர்கள்போல் உட்கார்ந்து விட்டார்கள். ஒரு துரைத்தன வக்கீலுக்கு இவர்கள் ஏன் அவ்வளவு பயப்பட வேண்டுமென்று இதை வாசிப்போர் கருதலாகும்.

இப்போது நமது நாட்டில் துரைத்தன வக்கீலென்றால் வரும் குற்றச் சாட்டுகளில் குற்றவாளியின் குற்றத்தைக் கண்டறிந்து குற்றவாளி தண்டனை யடையும்படி செய்ய வேண்டியவர் என்பது தெரிந்த விஷயம். அதற்குமேல் அவருக்கு வேறு பொறுப்பு ஒன்றுமில்லை. அதிகாரமுமில்லை. அந்தநாட்டில், அதிலும் அக்காலத்தில் அப்படியில்லை. துரைத்தன வக்கீலுக்குத் துப்பறிபவர்களைக்கொண்டு குற்றங்களைக் கண்டுபிடிக்கவும், தமக்குச் சரியான ருசுவிருக்கிறதாய்த் தெரிகிறவரையில் அவர்களைக் கைதுசெய்ய கட்டளைப் பிறப்பிக்கவும், பிறகு அவர்கள் குற்றத்தை ருசுப்படுத்தி அவர்கள் தக்க தண்டனையடையச் செய்யவும் யாவற்றுக்கும் அவருக்கு அதிகார முண்டு. போலீஸார் அவர் கட்டளைக்கு இணங்கி நடக்க வேண்டியவர்கள்.

அதனுற்முன் கதவு பூட்டப்பட்டிருப்பதை யறிந்ததே துர்க்கையனுக்குச் [illegible]நக முண்[illegible] [illegible]ன்றேல், "திறகதவை; நா[illegible] [illegible]யிர[illegible] [illegible]ன்று ஆக்ரோஷத்தே[illegible] களைப் யக்கிர[illegible] உங்க[illegible]

கள் என்ன விஷயங்களைக் கண்டுபிடித் திருக்கிறார்களோ வென்று கலக்கம் ஒருபக்க மிருக்கிறது. இவைகளே அவன் தைரியத்தைக் குன்றச் செய்தன.

கடைசியில் கருணாகரம்பிள்ளை போலீஸ் ஊது குழலை யெடுத்துக் கரத்தில் அலட்சியமாகப் புரட்டிக் கொண்டிருந்தாலும் "நீங்கள் எங்கள் ஏற்பாட்டிற்கு மாறாக நடக்கத் தொடங்கினால் நான் உங்களை யுடனே போலீஸாரைக் கொண்டு சிறைப்படுத்துவேன்" என்று கூறுவதுபோல் அவன் புத்திக்குப் பட்டது. ஆகையால் அவர்கள், கருணாகரம் பிள்ளை, கிருஷ்ணாராவ், இவர்கள் எண்ணத்திற்கு விரோதமாய் நாம் நடக்கமுயன்றால் உடனே பகிரங்கமாகச் சிறை செய்யப்படுவோம் என்று நன்றா யுணர்ந்தார்கள். வேறு வழியில்லை. போகப் போக விவகாரம் எப்படி நடக்கிறதோ அப்படிப் பார்த்துக் கொள்வோம் என்று மனதில் தீர்மானித்துக் கொண்டார்கள்.

---

## 29—வது அத்தியாயம்.

முன் அத்தியாயத்தின் இறுதியில் கூறியபடி கருணாகரம் பிள்ளை சாளரத்தில் நின்று வெளியில் வீதியில் நின்றிருந்த ஆளிடம் சமிக்கையாய்க் கட்டளையிட்ட கால்மணி நேரத்தி… வண்டிகள் …யிற்படியில் வந்து
நின்… …யே …டியில் கிருஷ்ண
…நாயகி, ஆகிய
…ண்டியில் தூர்க்
…ரின்

கல்மண்டபம் என்ற ஹோட்டலின் அருகில் வந்திருந்து, சீஷ்க்கையடித்ததே யுள்ளே நுழைந்து வாருங்கள். மிகத் துரிதம்" என்றெழுதி அங்குநின்ற போலீஸ்காரன் கரத்தி லளித்தான்.

கிருஷ்ணராவ் சாரதிக்குக் கட்டளையிட்டபடி வண்டிகள் கல்மண்டபத்திற்கு நேராகச் செல்லாமல் சாவதானமாகப் பலவீதிகளைச் சுற்றிக்கொண்டு அரைமணி நேரம் காலதாமதாய்ச் சென்றன. போலீஸார் அங்குவந்து சேர அவகாசங்கொடுக்கவே அப்படிச் செய்யப்பட்டது.

இரண்டு வண்டிகளும் கடைசியில் கல்மண்டபம் என்ற ஹோட்டலின் எதிரில் சென்று நின்றன. இவர்கள் வண்டியிலிருந்து இறங்கும்போது ஹோட்டலின் முன் குஷ்டரோகியாகிய ஒருவனும், ஒரு கண்ணின்மேல் பிளாஸ்திரி போட்டுக்கொண்டு நொண்டிபோன்ற ஒருவனுமாகிய இரண்டுபேர் வந்து "துரைகளே! பிரபுக்களே! ஏதேனும் ஆகாரத்திற்குத் தர்மம் செய்யுங்கள்" என்று கேட்டார்கள். அதேசமயம் இன்னொருவன் தீக்குச்சி வேண்டுமாவென்று இவர்களிடம் வந்தான். அவன் தீக்குச்சிப் பெட்டியைக் கிருஷ்ணராவிடம் அளிப்பவன்போல் சிறிதாகமடித்த ஒரு கடிதத்தைக் கொடுத்தான்.

கிருஷ்ணராவ் அவர்களைக் கண்ட[illegible]தே இவர்கள் தங்கள்
ஆட்களென்று அ[illegible]கள் காட்[illegible]ரிக்கையா
லறிந்து கொண்[illegible]பினு[illegible]சேஷ
மிருக்குமென்[illegible]
அதில், "ஈட[illegible]
ஸ்ரீயப்ப[illegible]

என்று கூறினன். பிறகு இவர்கள் ஹோட்டலுக்குக்குள் நுழையும்போது வீதிவழியாய் எங்கோ கூட்டமாய் வேடிக்கை பார்க்கச் செல்கிறவர்கள் போல் பத்துப் பனிரண்டுபேர் சிறு கூட்டங்களாக வருவதைக் கண்டார்கள். கிருஷ்ணராவ் அவர்கள் போலீஸ்காரரே யென்று உணர்ந்து கொண்டான்.

இவர்கள் வண்டியை விட்டிறங்கி ஹோட்டலுக்குள் நுழையும்போது ஹோட்டலைச் சேர்ந்த ஆட்கள் முதலில் யாரோ வேடிக்கையாகக் காலங்கழிக்க வந்தார்கள் என்று எண்ணிக் கொண்டார்கள். அவர்களவ்வாறு எண்ணியதே நலமாயிற்று.

ஹோட்டலின் கீழ்ப்பாகத்தில் விசாலமான ஒரு நடன சாலையும், உட்காரும் அறையும் இருந்தன. மேல் மாடியில் ஹோட்டல் இருந்தது. இடம் அசுத்தமாகவும் அழகின்றியு மிருந்தது. எல்லாச்சாளரங்களிலும் திரைவிடப்பட்டிருந்தது. முன் ஒருமுறை கிருஷ்ணராவும் ஜெகநாதனும் அங்குச் சென்றிருக்கிறார்கள். அப்போது கிருஷ்ணராவ் கீழ்க்கட்டில் பின்பாகமனைத்தும் பார்த்தான். ஆனால் இப்போது உடனே மேல் மாடிக்குச் செல்லும் படிகளிலேறத் தொடங்கியது ஜெகநாதனுக்கு வியப்பாயிருந்தது.

இவர்கள் படிக்கட்டிலேறி மேல்வாயிற்படி யருகிற் செல்லும்போது "ஹோட்டல் வழி—காரியாலயம்" என்று பலகை மாட்டப்பட்டிருந்தது. இரண்டாவது மாடியில் முன்னே யுள்ள ஒரு சிறு கூடத்தில் ஒரு மேஜையருகில் இலிகிதன் ... ருந்தான். மேஜைமேல் ஹோட் டலு ... கள் ... ப் பதிவு செய்யும் ... மேஜை யருகில்